விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 10 புதன்கிழமை (27.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 312

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டியில் கிணற்றிலிருந்து, பிறந்து ஒருநாளேயான சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இச் சிசு இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் தாயையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த தாய் சங்கானை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக சென்றவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தையை கிணற்றினுள் (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.கல்விப் பணிப்பாளருக்கு திடீர் இடமாற்ற அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் பணிப்புக்கமைய இடமாற்றப்படவுள்ளார்.

இடமாற்ற உத்தரவு தொடர்பில் ஆளுநரின் செயலாளரினால் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளராக நீண்டகாலமாக கடமையாற்றிய இவர், யுத்த காலத்தின்போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் (16ஆம் பக்கம் பார்க்க)


## கூட்டமைப்பு வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சி திருத்தச்சட்ட மூலத்திற்கு எதிராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்று புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று அரசியல் விவகார அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரான பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பிரிவின் தலைவரான பேராசிரியர் நரேந்திரா பண்டார ஆகியோரும் வழக்குத்தாக்கல் செய் (16ஆம் பக்கம் பார்க்க)

## உலகக்கிண்ண புகழ் ஒக்டோபஸ் உயிரிழந்தது



(பேர்லின்)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின்போது சரியான எதிர்வு கூறல் பலவற்றினால் புகழ்பெற்ற பால் என்னும் ஒக்டோபஸ் விலங்கு உயிரிழந்துள்ளதாக ஜேர்மன் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜேர்மனியின் ஒபர்ஹௌஸன் கடல் உயிரினப் பூங்காவில் இந்த ஒக்டோபஸ் விலங்கு வசித்துவந்தது. நேற்றுக்காலை அவ் விலங்கு உயிரிழந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## பரபரப்பை ஏற்படுத்திய கே.பியின் பேச்சு!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துடன் இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த மாவீரர்களின் பிள்ளைகள் மீது நாங்கள் எல்லோரும் கவனம் எடுக்க வேண்டும். ஏனெனில் அம்மாவீரர்கள் எமது தாய் மண்ணுக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் (16ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனின் மரணத்தை ஏற்றுக் கொண்டது இந்தியா

## ராஜீவ் காந்தி கொலைக் குற்றமும் நீக்கம்



(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணத்தை இந்தியா முதல் தடவையாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியான பிரபாகரன் மற்றும் இரண்டாவது குற்றவாளியான பொட்டம்மான் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## உலக உணவுத் திட்டத்தின் நிவாரண விநியோகம் தடைப்படும் அபாயம்!

(கொழும்பு)

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குரிய நிவாரண உதவிகளை வழங்கி வருகின்ற உலக உணவுத் திட்டத்திற்கு கொடையாளர்களிடமிருந்து கிடைக்கின்ற நிதியுதவியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக நிவாரண உணவு விநியோக நடவடிக்கைகள் இறுக்கமடைந்துள்ளதாக அந்த நிறுவனம் கூறியிருக்கின்றது.

இந்த நிதிச்சோர்வினால் இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படுகின்ற கோதுமை மா மற்றும் சீனி ஆகிய உணவுப் பொருட்களில் 50 வீதத்தைக் குறைக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும். உலக உணவுத் திட்டம் கூறியிருக்கின்றது.

இத (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை இரு தடவைகள் தோற்கடித்தவன் நான் மட்டுமே


### சஜித் பிரேமதாஸ எம்.பி.பெருமிதம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இரு தடவைகள் தேர்தல்களில் தோற்கடித்தவன் நான். இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிறேமதாஸவின் புதல்வரும், ஐ.தே.கவின் அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பியுமான சஜித் பிரேமதாஸ. அவர் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் மேற்கண்டவாறு கூறி உள்ளார். அவர் முக்கியமாகத் தெரிவித்திருந்தவை வருமாறு,

சில கற்றுக்குட்டிகள் எனது அரசியல் பற்றி தெரியாமல் கத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அரசியல் பற்றி அறியாமல் பேசுகின்றார்கள். நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே இரு தடவைகள் தோற்கடித்தவன். 2000ஆம் ஆண்டும் 2001ஆம் ஆண்டும் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களில் அம்பாந்தோட்டை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ.ஆணைக்குழு பணிப்பாளருடன் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேச்சு



(பிரசல்ஸ்)

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரசல்ஸ்நகரில்வைத்து ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆசிய வலயம் தொடர்பான சர்வதேச பணிப்பாளர் ஜேம்ஸ் மோரனை சந்தித்துள்ளார்.

அதேபோன்று இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகியவற்றுக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்ட குழுவின் தலைவர் டேவிட் டிர்ரையும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் கலந்து உரையாடியுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்ற விசாரணைக் குழு இலங்கைக்கு விஜயம் செய்யாது!

(ஒஸ்லோ)

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றங்கள் குறித்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் சர்வதேச நிபுணர்கள் ஆலோசனைக் குழு, புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ள மாட்டாது என்றும் இலங்கைக்கு அவர்கள் வரமாட்டார்கள் என்றும் ஐ.நாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எழுத்துமூல சாட்சியங்களை எதிர்வரும் டிசம்பர் 15 -ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா.கேட்டுள்ளது.

நிபுணர்கள் ஆலோசனைக் குழு அதன் அதிகார வரம்புகளுக்கு உட்பட்டே செயற்பட முடியும் என்பது இக்குழுவின் உறுப்பினர்களுடைய அபிப்பிராயமாகவுள்ளது.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மாட்டின் நேஸிர்கி, நிபுணர்கள் ஆலோசனைக்குழுவின் நியமனம் குறித்து கருத்துக் கூறுகையில், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கடந்த வருடம் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர்.

இவ் அறிக்கையில் கூறியிருந்தபடி மனித உரிமைகளுக்கு பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன்செயற்படுகின்றதா? என்பது குறித்து நிபுணர் குழுவினர் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை கூறுவார்கள் என்றார். (ச)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



பிரதித் தொழில் ஆணையாளர் இல்லத்தின் தொழில் அலுவலகம் நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தொழில் உறவுகள் உற்பத்தித் திறன் அமைச்சர் காமினி லொக்குகே மங்கள விளக்கேற்றி நாடாவைவெட்டித் திறந்து வைப்பதையும் பிரதி அமைச்சர் கலாநிதி ஜெகத் பாலசூரியாவிடம் இளைஞர்கள் விண்ணப்பத்தை கையளிப்பதையும் அமைச்சர் விண்ணப்பதாரிகளுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.கரன்)

# கலாசாரத்தைக் கட்டியெழுப்ப மாணவர்கள் முன்வரவேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி. அழைப்பு



கலாசார சீரழிவுகளில் இருந்து எமது சமுதாயத்தை பாதுகாக்க மாணவர்கள் மிகவும் அவதானமுள்ளவர்களாக திகழவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற மட்டு.அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இ.அரியநேத்திரன் மேலுள்ளவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த வருடம் மே மாதத்திற்கு பிற்பாடு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் ஓய்ந்துள்ளது.

கல்வி கற்பதற்கான ஒரு சூழலைத் தோற்றுவித்தாலும் மறுபுறம் தீயசக்திகளால் எமது கலாசாரத்தை சீரழிப்பதற்கு பாடசாலை மாணவர்களை பயன்படுத்துகிறார்கள்.

பாடசாலை மாணவர்கள் வெளியில் சென்று வருவதற்கான அச்சமற்ற நிலை நீங்கியுள்ளதாக அவர்களின் பெற்றோர்கள் நினைப்பதும் ஒரு காரணமாக இருக்கின்றது.

முன்பிருந்ததை விட தற்போது தான் தமிழ் மக்களாகிய நாம் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மிகவும் அவதானமாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஏனெனில் சில தீய சக்திகளால் திட்டமிட்ட வகையில் எமது சமுதாயத்தை பூண்டோடு அழிக்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக கலாசார சீர்கேடுகள் மற்றும் நில ஆக்கிரமிப்புக்களைக் குறிப்பிடலாம். ஆனால் நாம் அனைவரும் அவதானமுள்ளவர்களாக இருந்தால் எல்லாவற்றையும் முறியடித்து எமது வளங்கள் அனைத்தையும் எதிர்கால சந்ததியினருக்கு ஒப்படைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மேயர் வாசஸ்தலத்திலிருந்து இம்தியாஸ் வெளியேற்றப்படுவார்

கொழும்பு மாநகர மேயரின் உத்தியோக பூர்வ வாசஸ்த்தலத்தில் தொடர்ச்சியாக வசித்து வரும் முன்னாள் மேயர் இம்தியாஸ் முஹம்மட்டை எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி சட்டரீதியாக வெளியேற்றவுள்ளதாக கொழும்புமாநகரவிசேட ஆணையாளர் ஓமர் காமில் தெரிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் மேயர் இம்தியாஸுக்கு கடிதம் மூலம் தெரிவித்தாகவும் ஓமர் காமில் குறிப்பிட்டார்.

எனினும் தன்னை எவராலும் மேயர் வாசஸ்தலத்திலிருந்து வெளியேற்ற முடியாது என இம்தியாஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அல்லதுமேல்மாகாணஆளுநர்அலவி மௌலானா அல்லது முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரில் எவராவது ஒருவர் தன்னை வெளியேறக் கூறினால் மாத்திரமே நான் வெளியேறுவேன். அதுவரை வெளியேறமாட்டேன் என முன்னாள் மேயர் இம்தியாஸ் முஹம்மட் தெரிவித்தார்.

தற்போது மேயர் வாசஸ்தலத்திற்குரிய மின் கட்டணம் மற்றும் நீர் கட்டணம் செலுத்துவதை கொழும்பு மாநகர சபை நிறுத்தியுள்ளது. இது தனக்கு எதிராக மேற்கொள்ளும் ஒரு சதிநடவடிக்கையே என இம்தியாஸ் குறிப்பிட்டார். (ச)

# கொழும்புத் துறைமுகத்தில் சுங்க அதிகாரிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு துறைமுகத்தில் சுங்க அதிகாரிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். சைத்திய வீதிக்கூடாக துறைமுகத்திற்குள் செல்வதற்கு கடற்படையினரின் அனுமதி பெறவேண்டும் என சுங்க அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்தே அவர்கள் துறைமுகத்தின் முதலாம் இலக்க நுழைவாயிலில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பல வருடங்களாக சுங்கத்திணைக்களத்தில் பணியாற்றும் நாம் எதற்காக இந்த அனுமதியைப் பெற வேண்டும்? எமக்கு அனுமதி கிடைக்கும் வரை நாம் பகிஷ்கரிப்பை தொடருவோம் என சிரேஷ்ட சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் கூறுகையில் முதலாம் இலக்க வாயிலுக்கூடாக துறைமுகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் குறித்து, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தலைவரினாலும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாள்ர் நாயகத்தினாலும் கடற்படைக்கு அனுப்பப்பட்ட பெயர்பட்டியலொன்று உள்ளது. அந்த நுழைவாயில் உயர் பாதுகாப்புவலயப் பகுதியில் உள்ளதால் மேற்படி பட்டியலில் உள்ளவர்களை மாத்திரமே நாம் அனுமதிக்கிறோம் எனக் கூறியுள்ளார். (ச)

# வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் பணத்தால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து மக்கள் அனுப்பும் பணத்தினால் இலங்கையின் பொருளாதாரம் மிகப் பெரும் வளர்ச்சி கண்டு வருவதாகவும், இந்த வருடம் அதன் வருமானம் 3.8 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கலாம் எனவும் தினமின நாளேடு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள், புலம்பெயர் மக்கள் ஆகியோர் இலங்கை வங்கி ஊடாக அனுப்பும்பணத்தினால்பெருமளவான வருமானம் கிடைத்து வருகின்றது.

இதன் மூலம் கடந்த வருடம் 3.3 பில்லியன் டொலர்களை அரசு சம்பாதித்திருந்தது. அரசு ஒரு வருடத்தில் சம்பாதித்த நிதியில் இது பெரும் தொகையாகும்.

இதனிடையே, இலங்கையில் இருந்து மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணியாளர்களின் தகுதிக்கு ஏற்ப ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தங்களையும் இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனத்திற்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு :-
(C-1384) 0729994777


# பிக்கு மாணவனுக்கு அழைப்பாணை

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக அதிகாரியொருவரை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் பிக்கு மாணவன் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு அம்மாணவனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக நுகேகொடை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

பிக்கு மாணவர்களின் விடுதியிலிருந்து வந்த இரைச்சல் சத்தம் குறித்து விசாரிப்பதற்காக பல்கலைக்கழக உப வேந்தர், விடுதிக்குள் செல்ல முயற்சித்தபோது மேற்படி மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)


## காணி வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு வடக்குப் பக்கமாக யாழ்.கண்டி வீதிக் கருகாமையில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் 3 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:-
தொ.பே:-0214916709
தரகர் இல்லாமல்
நேரில் தொடர்பு கொள்ளவும்.
(2731)



## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் –யாழ்ப்பாணம்

## பட்டதாரிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள்

வட மாகாண சபையின் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைப் பரீட்சை – 2010, பரீட்சைக்கு பட்டதாரிகளைத் தயார்ப்படுத்தும் பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் நடத்தப்படவுள்ளதால் பங்கு கொள்ள விரும்பும் பட்டதாரிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு காலை 10.00 மணிமுதல் 4.00 மணிவரை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் வருகைதந்து பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

பங்களிப்புக் கட்டணம் : ரூபா 200.00

ஆசிரியர்கள் : பி. உமாசங்கர்
பி.கமலதாசன்

– செயலாளர்
வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் (யாழ்ப்பாணம்)
(2746)



செல்லா சினிமா




பசங்களுக்கு ஜாலியான படம்

காட்சி நேரம்
10.30 ,2.30 ,6.30



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவையூடாக யாழ். கொமர்ஷல் வங்கி கிளையில் பாதுகாப்பு நிலைய பொறுப்பதிகாரியாக(Security O.I.C)கடமையாற்றிய திரு.இ.ப.கயிலைநாதன் அவர்கள்25.09.2010 முதல் பிரதம பாதுகாப்பு அதிகாரியாக (Cheif Security Officer) பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு பாதுகாப்பு சேவை மேன்மேலும் வளம் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

651/12,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்
மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவை,யாழ்ப்பாணம்.

(சி-1475)

# இன்று ஒரு தகவல்

## தாயின் பெருமை

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இதை விளக்குவதற்கு எத்தனையோபேர். எவ்வளவு கதைகளை சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் வியாசர் தன்னுடைய மகன் சுகருக்கு ஒரு கதை சொன்னாராம்.

அது நரசிம்ம புராணத்தில் வருகிறதாம். அதை ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார்.

அந்தக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன். கோசல தேசத்தில் யக்ஞ சர்மா என்று ஒருத்தர் இருந்தார். அவருடைய மகன் தேவசர்மா. குருகுலத்தில் கற்றுவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

அந்தச் சமயத்தில் அவருடைய அப்பா காலமாகிவிட்டார். உடனே இவர் மிகவும் விரக்தியடைந்துவிட்டார்.

ஊரைவிட்டே கிளம்பி விட்டார். இன்னொரு ஊரில் போய் தங்கிவிட்டார்.

தினமும் பகவானை தியானித்துவிட்டு பிச்சை எடுத்து சாப்பிடுவார். இப்படியே இவரது காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் காலையில் ஆற்றுக்குப் போனார். குளித்துவிட்டு வேட்டியை கரையில் காயவிட்டார். அந்த சமயம் பார்த்து ஒரு காகமும் கொக்கும் அந்தப் பக்கமாக வந்தது. வேட்டியைப் பார்த்தது. தூக்கிக் கொண்டுபோய்விட்டது.

தேவசர்மா அதைப்பார்த்து விட்டார். மிகவும் கோபத்துடன் அந்தப் பறவைகளைப் பார்த்தார். அவ்வளவு தான்! அவையிரண்டும் எரிந்து சாம்பலாயின. அவ்வளவு வலிமை அவருக்கு உண்டு.

அப்பேற்பட்ட தேவசர்மா, அடுத்த நாள், சாவித்திரி என்ற ஒரு பதிவிரதையின் வீட்டுக்குப் பிச்சை வாங்குவதற்காக வந்தார்.

இவர் வந்து வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். அந்த அம்மா ரொம்ப நேரமாக இவரைக் கவனிக்கவேயில்லை.

அவருடைய கணவருக்கு பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார். அதையெல்லாம் முடித்து விட்டு இவருக்குப் பிச்சை போடுவதற்காக வெளியில் வந்தார்.

இவர் உடனே அந்த அம்மாவை கோபமாக முறைத்துப் பார்த்தார்.

ஆற்றங்கரையில் காகத்தையும் கொக்கையும் முறைத்துப் பார்த்தாரே, அப்படிப்பார்த்தார்.

"என்ன, அங்கே அந்தப் பறவைகளை எரித்தது போன்று என்னையும் எரித்து விடலாம் என்று பார்க்கிறாயா?" என்று கேட்டார் அந்த அம்மா.

இவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"ஆற்றங்கரையில் நடந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டார். அதற்கு அந்த அம்மா சொன்னார்.

"என்னுடைய கணவருக்கு சேவை செய்வது தான் என்னுடைய ஒரே தர்மம். அதனால், எங்கே என்ன நடத்தாலும் எனக்குத் தெரியும்" என்றார்.

தேவசர்மா மலைத்துப் போய் நின்றார். அதன்பின் அந்த அம்மா இவருக்கு புத்திமதி சொல்ல ஆரம்பித்தார்.

"இதோ பாரப்பா, உன்னுடைய தகப்பனார் இறந்து போனவுடன் நீ ஊரைவிட்டு இங்கே ஓடி வந்துவிட்டாய். உன்னுடைய தாயார் அங்கே தனியாக இருக்கிறாரே.... அவரையார் கவனிப்பது?

அநாதையாக இருக்கும் அந்த விதவைத் தாயாரை காப்பாற்றுவதை விட்டுவிட்டு இங்கே ஓடிவந்து இப்படிப் பிச்சையெடுத்து வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிறாயே... உனக்கு வெட்கமாக இல்லையா? பத்துமாதம் சுமந்தவர்களை பரிதவிக்க விட்டுவிட்டு வந்திருக்கிறாயே, என்ன நியாயம்?

நீ இப்பொழுது செய்து கொண்டிருக்கும் தியானம், தவம் எதற்கும் பிரயோசனமில்லை.

எவனுடைய தாயார் கஷ்டத்தில் இருக்கிறாரோ அவனுடைய வாழ்க்கை வீண். எவன் ஒருத்தன் தன்னுடைய தாயாரைக் காப்பாற்றுகிறானோ, தாயார் சொல்லும் படி கேட்கிறானோ அவன் செய்யும் எல்லா கர்மங்களும் இகலோக்கத்திலும் சரி, பரலோகத்திலும் சரி, நல்லவற்றையே செய்யும். அதனால் நீ உடனே உங்கள் ஊருக்குத் திரும்பிப்போ. உன்னுடைய தாயாரைக் காப்பாற்று!" என்று புத்திமதி சொன்னார்.

தேவசர்மா உடனடியாக ஊருக்குத் திரும்பிப் போனார். தாயாரைக் காப்பாற்றினார். அதன்பின் அவருக்கு எல்லாம் நல்லபடியாக நடந்ததாம். இதுதான் அந்தக் கதை.

இந்தக் கதையை , இந்தக் காலப் பையன் ஒருவனிடம் சொன்னேன். சொல்லி முடித்துவிட்டு,

நீயும் உன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னேன்.

அதற்கு அவன்,

"நான் நிச்சயமாக என்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்றுவேன் சேர். ஆனால், அதில் சின்ன வித்தியாசம் உண்டு" என்றான்.

"என்னடா அது?" என்று கேட்டேன்.

"நான் அம்மாவை நேரடியாக காப்பாற்றுவேன். அப்பாவை அம்மாவிடமிருந்து காப்பாற்றுவேன் " என்றான். விபரம் தெரிந்த பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.திரவிய ராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக வடமராட்சி வலய கல்வித் திணைக்கள கணக்காளர் ஆறுமுகம் கிரிதரன் கலந்து கொண்டு வெற்றி யீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

## மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி வலய பாடசாலைகளின் மாதாந்த மீளாய்வுக்கூட்டம் நாளை வியாழக் கிழமை காலை 8.30மணிதொடக்கம் மாலை3.30 மணி வரையாழ்/புலோலிமெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## இராசி பலன்

*27.10.2010*
*(ஐப்பசி 10, புதன்கிழமை)*
*சதுர்த்தி முற்பகல் 8.44 மணிவரை*
*மிருக சீரிடம் பின்னிரவு 1.26 மணிவரை*
*இராகுகாலம் 12.03-1.33 மணிவரை*
*சுபநேரம் 4.33-6.03 மணிவரை*

**மேடம்** ஆடை , ஆபரண சேர்க்கை அதிகரிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால்நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும்.

**இடபம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், ஆரோக்கியம் சீராகும், தெய்வ நம்பிக்கை கூடும்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார நலனுக்காக புது முயற்சியொன்றை எடுப்பீர்கள்.

**கடகம்** தொலைவழித் தகவலால் உற்சாகமடைவீர்கள், பணத்தை கட்டுப்பாடின்றி செலவு செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், பயண அலைச்சலுண்டு.

**சிங்கம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், பதவியுயர்வு பற்றிய செய்தி வந்து சேரலாம், இல்லத்தில் இனிய காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**கன்னி** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்துசேரும் நாள், புதிய திட்டங்களைத் தீட்டி இலாபத்தை தொழிலில் காண நினைப்பீர்கள், உற்சாகத்துடன் செயற்படும் நாள்.

**துலாம்** பிரயாண நன்மையுண்டு, தந்தை வழி உறவினர்கள் சந்திப்பு , புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள், கட்டுப்பாடுண்டு.

**விருச்சிகம்** விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, பெரியோரின் வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பதால் அமைதியைக் காணலாம்.

**தனுசு** வரன்கள் வந்து வாயிற் கதவைத் தட்டும் நாள், குடும்பத்தில் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், அபூர்வ சந்திப்புண்டு.

**மகரம்** மனையில் மங்கல நிகழ்ச்சிகளில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், உடல் ஆரோக்கியம் சீராகும், வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கும்பம்** புதிய பொருட்களின் வரவு கூடும் நாள், பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான தொகை வந்து சேரும்.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான செய்தியொன்று வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

வளவன்

## வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம்

வடமாகாணத்திலுள்ள சகல வங்கிகளையும் சேர்ந்த ஓய்வூதிய சங்கங்களுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கி பிராந்திய காரியாலயத்தின் மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல செயற்குழு அங்கத்தவர்களையும் பொது உறுப்பினர்களையும் இச்சங்கத்தில் இணைய விரும்புகின்றவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ஆ.இராச நாயகம் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் போர்ச்சூழ் நிலையால் இன்றைய ஓய்வூதியர்களாக இருக்கும் முன்னாள் சகல வங்கிகளையும் சேர்ந்த ஊழியர்களும் பல வழிகளில் பாதிப்புக்குள்ளாகி உயிரையும் உடைமைகளையும் இழந்து வங்கிகளை இன்றைய உன்னத நிலையில் வைத்திருப்பதற்காக தியாகங்களை புரிந்துள்ளனர்.

தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கொமர்சல் வங்கி, ஹற் றன் நசனல் வங்கி மற்றும் செலான் வங்கிகளைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் பொதுச் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

நாம் அனைவரும் இணைந்து எமது பாதிப்புக்களுக்கான நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ள பலமான ஒரு இணைப்பாக எம்மை உருவாக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. தயவு செய்து பொதுக் கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் காத்திரமான பங்களிப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நவம்பர் 18 இல் மர நடுகைத் திட்டம்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் 10 மில்லியன் ரூபா பெறுமதியான மரக்கன்றுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடப்படவுள்ள நிலையில் இதற்கு மேலதிகமாக சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சுடன் இணைந்து மேலும் 50 ஆயிரம் மரக்கன்றுகளை குடாநாட்டில் நடுவது தொடர்பில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ் தேக்கு , வேம்பு , மலைவேம்பு ,மங்குஸ்தான் , கஸுவலினா போன்ற மரக்கன்றுகள் நடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து நகர மற்றும் பிரதேச சபைகளினூடாக குப்பைகளை கூட்டெருவாக மாற்றும் திட்டம் தொடர்பிலும் நேற்றைய தினம் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இத்திட்டம் வெகுவிரைவில் நடைமுறைக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட செயலாளர், யாழ். பிரதேச செயலாளர் , விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மற்றும் சுற்றுச் சூழல் இயற்கை வள அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | -- | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 100 |
| தக்காளி | 80 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 150 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 55 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 120 | 140 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 130 | 120 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 40 |



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் எஸ். உதயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி நா. அனந்தேஸ்வரன் உரையாற்றுவதையும் மாணவி ஒருவருக்கு திருமதி நந்தினி உதயகுமார் பரிசில் வழங்குவதையும் மற்றும் பாடசாலை மாணவிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

## அதிபர்கள் கௌரவிப்பு

(அல்வாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபர்கள் தினவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ந.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆங்கிலபாட உதவிக் கல்விப்பாளர் ச.சுந்தரமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இப்பாடசாலை 1838 ஆம் ஆண்டு ஆரம்பமானது. அன்று தொடக்கம் இன்றுவரை உள்ள அதிபர்கள் இத்தினத்தில் நினைவு கூரப்படவுள்ளனர். (ஸ்ரீ-19)

## முதியோர்தின நிகழ்வு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் உலக முதியோர் தின நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக பொதுமண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு, கிழக்கு கரையோர சமுதாய மீள் அமைப்புத் திட்டத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் வே.வீரகத்திப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் கல்வி சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. மேலும் 50 முதியோர்கள் அன்பளிப்பு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ஸ்ரீ-24)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதி கொட்டடியைச் சேர்ந்த பத்மநாதன் அகிந்தன் என்பவரின் (862041321V) எனும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் சமூகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார். (ஸ்ரீ-2)

## திறப்பு விழா

(அல்வாய்)

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் பிரதான வாயிற் கதவு திறக்கும் வைபவம் இன்று 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வணபிதா என். அருள்நாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார் என பாடசாலை அதிபர் திருமதி. செ. சுந்தரேசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கரவெட்டி பிரதேச செயலக பிரிவிலுள்ள 363 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்ட கொடுப்பனவு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களில் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத மற்றும் சொந்தக் காணிகளில் குடிசைகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு உலக வங்கியினால் வழங்கப்படும் வடக்கு- கிழக்கு மீள் நிர்மாண வீட்டுத் திட்டத்தின் 5 ஆம் கட்டத்திற்கான வீட்டுத்திட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் 40 கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 363 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாமல் மற்றும் சொந்த வீடுகள் இன்மையாலும் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ் 5 ஆம் கட்ட வீட்டுத்திட்ட கொடுப்பனவானது மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற மக்களை இனங்கண்டு அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

எனவே, 6 ஆம் கட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் மக்களுக்கு அடுத்த கட்டத்திற்கான கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படும் எனவும் வறிய மற்றும் குடிசையில் வாழ்ந்து வரும் மக்களை இனங்கண்டு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளதுடன் இம்முறை வழங்கப்பட உள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள் துரிதமாக வீட்டுத்திட்ட வேலைகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-24)

## மாகாணமட்ட கணித வினாடி வினாப்போட்டியில் வெற்றி

(மாதகல்)

மாகாண மட்டத்தில் நடைபெற்ற கணித வினா விடை போட்டியில் மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 4 இல் கற்கும் சி.டிலக்சன் என்ற மாணவன் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாணவனின் திறமையினை பாராட்டிய பாடசாலையின் அதிபர் இம்மாணவனின் தொடர் பயிற்சியும் ஆசிரியர்களின் வழிப்படுத்தலுமே வெற்றிக்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-40)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி.எல்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.வசந்தி மாலா சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ்.சென். ஜேம்ஸ் ஆலய பங்குத் தந்தை வணபிதா ஆ.நேசராஜா கலந்துகொள்வார். (ஸ்ரீ-2)

## மாணவர்களின் கல்வித் தேவைக்கென பல்லூடக தெறிகருவி கொள்வனவு

### அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக பல்லூடகத் தெறிகருவி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி வழங்கியுள்ளார்.

இணுவில் மத்திய கல்லூரி சமூகத்தினரின் அழைப்பின் பேரில் கடந்த சனிக்கிழமை கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். அச்சமயம் கல்லூரி அதிபர் சதானந்தன் கல்லூரியில் நிலவும் பொதுவான குறைபாடுகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்த அதே வேளை மாணவர்களின் கல்வித் தேவைக்கென பல்லூடகத் தெறிகருவி தேவையாகவுள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளில் மாணவர்களுக்கான பல்லூடகத் தெறிகருவியை பெற்றுத் தருவதாக அச்சமயம் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

தமது உறுதிமொழிக்கு அமைவாக நேற்று முன்தினம் மகேஸ்வரி நிதியமூடாக அதற்குரிய பெறுமதியான 1இலட்சத்து39 ஆயிரத்து 500 ரூபாவிற்குரிய காசோலையினை கையளித்தார்.

நேற்று முன்தினம் மாலை அமைச்சரின் பணிமனைக்கு வருகை தந்திருந்த கல்லூரி அதிபர் சதானந்தன் மற்றும் கல்லூரியின் பழைய மாணவனும் கொழும்பு பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினருமான சந்திரலிங்கம் ஆகியோரிடம் மேற்படி காசோலையினை அமைச்சர் கையளித்தார். (ஸ்ரீ-2)


## வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வெளிவாரிப் பரீட்சைகள் -2009
### கலைமுதற்தேர்வு - 2009 (வெளிவாரி)
### மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

கலைமுதற் தேர்வு - 2007 & 2008 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 19.11.2010 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக் கட்டளை / தபாற்கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28×20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் **உதவிப்பதிவாளர், வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.


**பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.**


மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.10.2010.

(1473)







யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் வித்தியாலய அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன் ஆசியுரை வழங்குவதையும் வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை திருமதி அமலஜோதி மகேந்திரராஜா மாணவன் ஒருவனால் மாலைசூட்டிக் கௌரவிக் கப்படுவதையும் விழாவில் கௌரவிக்கப்பட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## மாந்தை சோல்ட் நிறுவன ஊழியர்களுக்கு 150 மில்லியன் ரூபா. இழப்பீட்டுத் தொகை

(கொழும்பு)

யுத்தம் காரணமாக மூடப்பட்ட மாந்தை சோல்ட் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு 150 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டு வருவதாக தொழில் உறவுகள் மற்றும் மனிதவள அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் காமினி லொக்கு கேவின் தலைமையில் இந்த இழப்பீடு வழங்கும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனத்தில் பணி யாற்றிய ஊழியர்கள் சிலருக்கு 15 மில்லியன் ரூபா இழப்பீடு வழங் கும் வைபவம் அண்மையில் வவு னியா கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

அதேவேளை சோல்ட் நிறு வனம் மூடப்பட்ட பின்னர் அதில் பணியாற்றிய 49 ஊழியர்கள் மரணமடைந்து விட்டனர். இவ்வாறு மரணமடைந்தவர்களின் மனைவி மற்றும் பிள்ளைகள் வவுனியா, யாழ்ப்பாண மாவட்டச் செயலகங் களுக்குச் சென்று தமது அடையா ளங்களை உறுதிப்படுத்தி இழப்பீடு களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் காமினி லொக்குகே கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை ஊழியர்கள் எவ ரேனும் வெளிநாட்டில் வசித்து வந் தால் அவர்களும் தமது அடையாளங் களை உறுதிப்படுத்தி இழப்பீடு களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

## நாட்டில் இரண்டு சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன

### கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த நாட்டில் இரண்டு சட்டங் கள் இருப்பதாகவும் அவற்றில் ஒன்று அரசாங்கத்தில் இருப் போருக்கு மற்றையது எதிர்கட்சி யில் இருப்போருக்கும் என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப் பினரும் கட்சியின் பிரதித் தலை வருமான கரு ஜயசூரிய தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வெலிக்கடைச்சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை சந் தித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சரத்பொன்சேகாவை சிறைக்கு அனுப்புவதற்கு முன்னர் 3 தற் கொலைக் குண்டுதாரிகள் விடு விக்கப்பட்டுள்ளனர் எனக் கூறிய அவர் இம் மூவரும் தற்போது எங்கே எனக் கேள்வி எழுப்பினார்.

இவர்கள் யாருடைய அறி வுறுத்தலின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள்? எனக் கேட்ட கரு ஜயசூரிய இவற்றை வைத்துப் பார்க்கும் போது சரத்பொன்சேகா வின் பாதுகாப்பு முற்றிலும் அரசி டமே உள்ளது என சுட்டிக்காட்டினார்.

சரத்பொன்சேகாவின் பாது காப்பை உறுதி செய்வதற்கான முறையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வலியுறுத் தினார். (ஸ்ரீ-2)



யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனத்தினால் பாடசாலை சீருடைகளும் காலணிகளும் துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப் பாளர் எஸ்.கைலசநாதன் மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் அருகில் அதிபர் சிறிகுமரன் மற்றும் யாழ். எயிட் நிறுவனத்தைச் சேர்ந்த வ.பார்த்திபன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## 2010.10 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 0939 - முதலாம் எட்மண்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- ❖ 1275 - ஆம்ஸ்டர்டாம் நகரம் அமைக்கப் பட்டது.
- ❖ 1682 - பென்சில்வேனியாவின் பிலடெல் பியா நகரம் அமைக்கப்பட்டது.
- ❖ 1795 - ஸ்பானியக் குடியேற்றநாடுகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடை யேயான எல்லைகளை வரையறுக் கும் உடன்படிக்கை ஐக்கிய அமெரிக் காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடை யில் செய்துகொள்ளப்பட்டது.
- ❖ 1806 - பிரெஞ்சுப் படையினர் பேர்லின் நகரினுள் நுழைந்தனர்.
- ❖ 1807 - பிரெஞ்சு-ஸ்பானியன் படைகள் போர்த்துக்கலைக் கைப்பற்றின.
- ❖ 1810 - ஐக்கிய அமெரிக்கா முன்னாள் ஸ்பா னியக் குடியேற்ற நாடான மேற்கு புளோரிடாவை இணைத்துக் கொண் டது.
- ❖ 1867 - கரிபால்டியின் படைகள் ரோம் நக ருள் புகுந்தன.
- ❖ 1870 - 1இலட்சத்து 40 ஆயிரம் பிரெஞ்சுப் படை வீரர்கள் "மெட்ஸ்" நகரில் இடம்பெற்ற போரில் பிரஷ்யாவிடம் சரணடைந்தனர்.
- ❖ 1891 - ஜப்பானில் 8.0 நிலநடுக்கம் ஏற்பட்ட தில் 7ஆயிரம் பேருக்கு மேல் கொல் லப்பட்டனர்.
- ❖ 1924 - உஸ்பெக் சோவியத் குடியரசு சோவி யத் ஒன்றியத்தில் அமைக்கப்பட் டது.
- ❖ 1953 - தெற்கு அவுஸ்திரேலியாவில் ஈமியூ ஃபீல்ட் என்ற இடத்தில் டோட்டெம் 2 என்ற பிரித்தானிய அணுவாயு தச் சோதனை மேற்கொள்ளப்பட் டது.
- ❖ 1958 - பாகிஸ்தான் முதலாவது ஜனாதிபி இஸ்காண்டர் மிர்சா இராணுவப் புரட்சி ஒன்றில் பதவியில் இருந்து இறக்கப்பட்டு ஜெனரல் அயூப்பான் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- ❖ 1961 - நாசா தனது முதலாவது சட்டர்ன் 1 என்ற விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது.
- ❖ 1962 - ஐக்கிய அமெரிக்காவின் U-2 விமா னம் ஒன்று கியூபாவில் சுட்டு வீழ்த் தப்பட்டது.
- ❖ 1971 - கொங்கோ மக்களாட்சிக் குடியரசு சயீர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ❖ 1979 - செயினிட் வின்சென்ட் கிரெனே டின்ஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- ❖ 1981 - சோவியத் நீர்மூழ்கிக்கப்பல் U 137 சுவீடனின் கிழக்குக் கரையில் மூழ் கியது.
- ❖ 1982 - யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் நிலையங்கள் விடு தலைப் புலிகளால் தாக்கப்பட்டன.
- ❖ 1991 - துருக்மெனிஸ்தான், சோவியத் ஒன் றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- ❖ 1991 - போலந்தில் 1936ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் தடவையாக சுதந் தரமான தேர்தல்கள் இடம்பெற் றன.
- ❖ 1999 - ஆர்மீனியாவில் நாடாளுமன்றத் தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பிரதமர், அவைத் தலைவர் உட்பட 8 பேர் கொல் லப்பட்டனர்.
- ❖ 2005 - பாரிசில் இரண்டு முஸ்லிம் இளை ஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் ஏற்பட்டது.
- ❖ 2007 - கொங்கோவில் இடம் பெற்ற பெரு வெள்ளம் காரண மாக 30 பேர் கொல்லப்பட்டு 100 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

- ❖ 1728 - ஜேம்ஸ் குக், பிரித்தானியாவின் கடற்படைக் கப்டன், நாடுகாண் பயணி (இ. 1779)
- ❖ 1858 - தியொடோர் ரோசவெல்ட், 26 ஆவது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ.1919)
- ❖ 1920 - கே.ஆர்.நாராயணன், இந்தியா வின் 10வது குடியரசுத் தலைவர்.
- ❖ 1977 - குமார் சங்கக்கார, இலங்கையின் துடுப்பாளர்.

### இறப்புகள்

- ❖ 1605 - அக்பர், முகலாய மன்னன் (பி.1542)
- ❖ 1980 - ஜோன் விளெக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1899)
- ❖ 1992 - டேவிட் போம், அமெரிக்க இயற்பியலாளர், தத்துவவிய லாளர் (பி. 1917)

**1990 - யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறினர்**

# கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி முத்துக் குமார சுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆறு முகம் சின்னத்தம்பி அரங்கில் பாடசாலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார்; ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், தென்மராட்சி கல்வி வலய ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாள ரும், கோட்டக்கல்வி அலுவலருமாகிய ந.சத் திய நாதன், யாழ்.அச்சுவேலி மகாவித்தி யாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம்,முன் னாள் அதிபர் க.மயில்வாகனம்,சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சிறிதரன் மற் றும் கனடா கைதடிப் பாடசாலைகள் அபி விருத் திச் சங்கத் தலைவர் வே.செந்தில் குமரன் ஆகி யோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள் ளனர்.

கௌரவ விருந்தனர்களாக கைதடி கலை வாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி ல.முகுந்தன்,கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் திருமதி. இ.திருஞானசி வம், யாழ்.எருதிடல் அ.த.க. பாடசாலை அதி பர் வே.பால சுப்பிரமணியம், யாழ்.நவீல்ட் பாடசாலை அதிபர். எஸ்.ரி.மகேந்திரன் மற்றும் கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் தா.கணேசபாலேந்திரன் ஆகியோர் சிறப் பிக்கவுள்ளனர்.

நிகழ்வின் நினைவுப் பேருரையை யாழ். பல் கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வ.பரந்தாமன் ஆற்றுவார்.

நூற்றாண்டு மலரை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைப்பர்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவ லிங்கராஜன் நிகழ்த்துவார்.

மதிப்புரையை தென்மராட்சி வலய தமிழ் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முர கதாஸன் நிகழ்த்த ஏற்புரையை மலர் ஆசிரி யர் ஜெ. தவராஜா ஆற்றுவார்.

(ஸ்ரீ-2)

# ரிசானா நபீக்கின் மரண தண்டனையை தளர்த்துமாறு ஜனாதிபதி மேன்முறையீடு

சவுதி அரேபிய நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை பணிப் பெண் ரிசானா நபீக்கின் தண்டனையை தளர்வு படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சவுதி அரேபிய மன்ன ருக்கு மேன்முறையீடு ஒன்று முன்வைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ளது. இந்த மேம்முறை யீட்டு மனுவை வெளிநாட்டு அமைச்சினு டாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. தமக்கு வழங்கப்பட்ட மரண தண்ட னையை ஆட்சேபித்து ரிஷானா நபீக் செய்த மேன்முறையீட்டை ரியாத்தில் உள்ள உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அத்துடன் அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை அது உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் ரிஷானா நபீக். மரண தண் டனையில் இருந்து விடுபடுவதற்கு இராஜ தந்திர மட்ட நடவடிக்கைகள் மூலமே உரிய தீர்வு பெறமுடியும் என வெளிநாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு பெப் ரவரி மாதம் தாம் பணியாற்றிய தொழில் வழங் குநரின் 4 மாத குழந்தையை கொலை செய் தார். என்ற குற்றச்சாட்டிற்கு கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி அவ ருக்கு டவாதமி நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகம் திறப்பு

கடந்த காலத்தில் போரினால் பாதிப்ப டைந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இவ் அலுவலகமானது எதிர்வரும் நவம் பர் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச் சர் விமல் வீரவன்சவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளதாக இவ்வதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# தொழில் வழங்குநரால் தாக்கப்பட்ட பணிப்பெண்

(கொழும்பு)

குவைத் நாட்டுக்கு பணிப் பெண்ணாக சென்ற ஒருவர் அங்குள்ள தொழில் வழங்கு நரால் தாக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளார்.

டயகம பகுதியைச் சேர்ந்த இப்பெண் தொழில் தருணரினால் தாக்கப்பட்டு உடல் அங்கங்கள் செயலிழந்த நிலையில் நாடு திரும் பியுள்ளார்.

இது தொடர்பில் டயகம பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ)



யா/புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 80 ஆவது ஆண்டு நிறைவும் அமுதம் மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை மாணவிகள் தேவாரம் இசைப்பதனையும் படங்களில் காணலாம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**அவுரி**

Botanical Name - Indigofera tinctoria
Family - Leguminosae
Engl - Indigo
Sinh - Nilawara

இது சிறிய பெருசெடி வகையைச் சார் ந்தது. 60 தொடக்கம் 120 செ.மீ உயரம் வரை வளரக்கூடியது. வளைந்த நிறையக் கிளைக ளைக் கொண்டது.

இதன் தண்டுகள் வெண்ணிறமான மென்மையான உரோமங்களைக் கொண் டிருக்கும். இலைகள் ஒன்று விட்ட இலைய மைப்பைக் கொண்டது. கோள வடிவ இலை களைக் கொண்டது.

அடிப்பகுதி ஒடுங்கிக் காணப்படுவதோடு பிரகாசமான பச்சைநிறமுடையது. பூக்கள் ஒழுங்கற்றவை. இருபாலானவை. சிறி யவை. றோஸ் நிறம்கொண்டவை.

அவரை வடிவ உருளையான காய்கள் இதில் காணப் படும். பழங்களில் நிறைய விதைகளாக இருக் கும் இதில் 8 தொடக்கம் 12 விதைகள் காணப்படும். மண்ணிற முடையவை. பூக்கள் வருடம் முழுவதும் காணப்படும்.

**இனவிருத்தியும் , பரம்பலும்:**

விதைகள் மூலம் இனவிருத்தியடையும் செடியாகும். உலர்ந்த பகுதிகளில் பரம்பல் அதிகமாக இருக்கும். தெருவோரங்களில் களைச்செடியாகக் காணப்படும்.

**மருத்துவப் பயன்கள்:**

✹ இலைகளை சேகரித்து நன்கு கழுவி அரைத்து புண்களுக்கு பற்றுப் போட புண்கள் விரைவில் ஆறும்.

✹ அவுரி இலைகளையும் வெள் எருக்கு இலைகளையும் சம அளவு எடுத்து நன்கு கழுவி வெந்நீரில் அரைத்து பசைபோல எடுக்கவும். புழுவெட்டு அதாவது, தலையில் முடிகள் ஆங்காங்கு கொட்டுப்பட்டு இருக்கும் இடத்திற்கு பூசிவர புழுவெட்டு குணமாகும். (applied on patches of falling hair on the head)



✹ அவுரி வேர்ப்பட்டைகளை சேகரித்து 40 கிராம் அளவு எடுத்து 300 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி அளவு எடுத்து காலை, மாலை விஷக்கடி , பாம்புக்கடி ஆகியவற்றின் நச்சுக்குறி குண ங்கள் விலகுமட்டும் கொடுக்கலாம். தினமும் புதிது புதிதாக குடிநீர் காய்ச்ச வேண்டும்.

✹ அவுரி இலைகள் 40 கிராம் எடுத்து 300 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக் சுண்டக்காய்ச்ச வேண்டும். 60 மில்லி அளவு காலை, மாலை குடிக்கக் கொடுக்க வாத நோய்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்த நோய் விலகும்.

✹ அவுரி இலை , அவுரி வேர்ப்பட்டை பொரி த்த பெருங்காயம் , மிளகு இலைகள் ஆகிய வற்றை சம அளவு எடுத்து நன்றாக அரைத்து சுண்டையளவு காலை, மாலை கொடுக்க நரம்புச் சிலந்தி (Neurofibroma) குண மாகும்.

✹ அவுரி இலைசாறு 600 மில்லி எடுத்து தேங்காய் எண்ணெய் 750 மில்லியில் சேர்த்துக் காய்ச்சி சாறு வற்றியதும் பதத்தில் இறக்கி தலைக்கு பூசிவர பொடுகு முற்றாக நீங்கும்.

✹ அவுரி இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்து எடுத்து 1 தொடக்கம் 2 கிராம் அளவு தினமும் பாலில் சேர்த்து கலந்து கொடுக்க வாத சுரம் (உடம்பு வலியோடு கூடிய காய்ச்சல்) மாந்தம், மூட்டுக்களில் ஏற்படும் வலிமுதலியன தீரும்.

✹ இலைகளில் சாறு 10 மில்லி எடுத்து 10 மில்லி தேனுடன் கலந்து தினமும் காலை , மாலை குடிக்கக் கொடுக்க நரம்பு சம்பந் தமான கோளாறுகள் நீங்கும்.

✹ குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான நோய்களிற்கு அவுரி இலை ச்சாற்றை ஆமணக்கு எண்ணெயில் கல ந்து தெப்புளைச் சுற்றி பூசிவர குணமா கும்.

✹ இதன் இலைச்சாற்றை தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு ஏற்படும் வாய வியல் மற்றும் வாய்ப்புண் முதலியவற்றி ற்கு பூசிவர அவை குணம்பெறும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

# பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது

## ஜனாதிபதி வலியுறுத்தல்

பல்கலைக்கழக கல்வியை சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். பல்கலைக் கழகங்களில் முறைகேடாக நடந்துகொள்ளும் ஒரு சில மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் கல்வி பயிலும் 80 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க இடமளிக்கக்கூடாது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்கலைக்கழக உபவேந்தர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தினார்.

பல்கலைக்கழகங்களில் ஒழுக்கம் சீர்கெட்டு வருவது மற்றும் இடம்பெறும் உள்ளக பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டில் ஒரு நீதியும் பல்கலைக் கழகங்களுக்கு ஒரு நீதியும் என இரண்டில்லை எல்லோருக்கும் ஒரே நீதியே யார் குற்றம் செய்தாலும் தண்டனை வழங்கியே ஆக வேண்டும்.

ஒழுக்கக் கேடாகவும் சட்டவிரோதமாகவும் செயற்படும் ஒவ்வொருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்களுக்கான இலவச உணவு வழங்குவது குறித்த மாநாடு

(அல்வாய்)

பாடசாலை மாணவர்களுக்கு 2011ஆம் ஆண்டுக்கான இலவச உணவு வழங்குவது தொடர்பான மகாநாடு மத்திய கல்வி அமைச்சின் நான்காம் மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் (போஷாக்கு), மாகாணக் கணக்காளர், வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர், போஷாக்கு இணைப்பு உத்தியோகத்தர், வலயக் கணக்காளர், சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள், உலக உணவுத்திட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் தவறாது சமூகமளிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது 2009- 2010 ஆம் ஆண்டுகளில் வெளியான சுற்று நிருபங்கள் மேலும் ஏற்பட்ட செலவினங்களையும் எடுத்து வருமாறு கல்வி அமைச்சின் கல்வித்தர விருத்தி மேலதிக்கச் செயலாளர் எச்.யூ.பிரேமதிலக அறிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தி வடமாகாணத்தில் உள்ள சகல வலயங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் பணித்துள்ளார்.

(ஸ்ரீ-19)

# இலங்கை ஜனாதிபதியை சந்திக்கும் தமிழக மீனவர்கள் குறித்து இரகசிய விசாரணை

(இராமநாதபுரம்)

இலங்கை ஜனாதிபதியை சந்திப்பதற்காக இலங்கை வர இருக்கும் தமிழக மீனவர்கள் குறித்து தமிழக பாதுகாப்பு பிரிவினர் இரகசியமாக விசாரித்து வருகின்றனர். தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதார பாதுகாப்பு வழங்குவது உட்பட பல்வேறு கோரிக்கையை முன்வைத்து இராமேஸ்வரம் துறைமுக விசைப் படகு மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் எதிர்வரும் நவம்பர் 4 இல் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சரை சந்திக்க உள்ளனர்.

இந் நிலையில் இலங்கை வரவுள்ள தமிழக மீனவர்கள் குறித்து புலனாய்வுத்துறை, கியூ பிரிவு, மரைன், உளவுப்பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவினர் மீனவர்களிடம் விசாரிக்கின்றனர். இலங்கை செல்லும் மீனவர்கள் யார், அவர்கள் யார் மூலம் செல்கின்றனர். இலங்கை செல்வார்களா அல்லது அறிக்கை அளவில் மட்டும் கூறிவிட்டு கைவிட்டு விடுவார்களா, இலங்கையில் ஜனாதிபதியை சந்திக்கும் போது அவரிடம் எத்தனை மற்றும் என்ன கோரிக்கைகள் வைக்க உள்ளனர் என பல்வேறு விதமாக விசாரிக்கின்றனர்.

இந் நிலையில் சென்னையில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் இலங்கை செல்ல உள்ள துறைமுக விசைப்படகு மீனவர் சங்கசெயலர் தேவதாசை தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் முதியோர்,மாற்றுவலுவுள்ளோர் தினம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் சர்வதேச முதியோர் ,மாற்றுவலுவுள்ளோர் தினம் இன்று காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா, சிறப்பு விருந் தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வே.வேல்நிதி, அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.கிருஸ்ணன் மற்றும் யாழ். மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ஆ.ஞானவேல் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

(ஸ்ரீ-2)

# இலங்கை மக்களின் சராசரி ஆயுட்காலம் 74 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கை மக்களின் சராசரி ஆயுட்காலம் 74 ஆக உயர்வடைந்துள்ளதென சுகாதார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் இலங்கை மக்களின் ஆயுட் காலம் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஆண்களின் ஆயுட்காலம் 69 ஆகவும் பெண்களின் ஆயுட்காலம் 76 ஆகவும் உயர்வடைந்துள்ளதெனவும் குறிப்பிடப்படுகிறது.

முதியவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதனால் அவர்களைப் பராமரிப்பதற்கு முறையான திட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வைத்தியசாலைகளில் முதியவர்களுக்கென தனியார் பிரிவுகளை உருவாக்கு வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குலக நாடுகளைப் போன்று இலங்கையில் முதியவர்களுக்கு விசேட பராமரிப்பு வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மீன் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க அரசு திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் மீன் ஏற்றுமதி மூலமான வருமானத்தை இரண்டாயிரத்து 100 கோடியிலிருந்து 50 ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2013ஆம் ஆண்டளவில் இந்த இலக்கை எட்ட முடியும் என மீன் பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடித்துறையின் பங்களிப்பு மூன்றாம் இடத்தில் உள்ளதாகவும் இதனை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப் படு கின்றது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேசச் சட்டத்துக்கு ஏற்ப மீன்பிடித்துறை நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)



மக்கள் வங்கியின் வலயங்களுக்கிடையிலான T20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி (Leather Ball) இம்மாதம் 22, 23, 24 ஆம் திகதிகளில் பாணந்துறை நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இச்சுற்றுப் போட்டியில் யாழ். பிராந்திய மக்கள் வங்கி கிரிக்கெட் அணியும் பங்குபற்றி முதலாவது சுற்றில் வடமேல் வலய மக்கள் வங்கி அணியுடனான போட்டியில் வெற்றியீட்டியது. பங்கு பற்றிய அணி வீரர்களை படத்தில் காணலாம்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும் மானிப்பாய் சேவை நிலையமும் | 12.12.2010 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 02 | காங்கேசன் துறைக் கிளையும்,மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ். பிரதான வீதிக்கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | நெல்லியடிக்கிளை | | |
| 05 | அச்சுவேலிக்கிளை | | |
| 06 | சங்கானைக்கிளை | | |
| 07 | சுன்னாகம் கிளை | | |
| 08 | சாவகச்சேரிக்கிளை | | |
| 09 | வல்வெட்டித்துறைக்கிளை | | |
| 10 | யாழ்.பல்கலைக்கழகக்கிளையும்,திருநெல்வேலி சேவை நிலையமும் | | |
| 11 | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 12 | பருத்தித்துறைக்கிளை | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்குள்ளது.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2010.10.27

(சி/1469)

# அருள்மிகு ஆனைக்கோட்டை வள்ளி தே
# (மூத்தநயினார் திருக்கோயில்) மஹா கு

## கும்பாபிஷேகத்தில் தெய்வ சான்னித்தியம்



ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவில் என்று அழைக்கப்படும் வள்ளி தேவ சேனா சமேத முருகப் பெருமானுடைய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நாம் உண்ணுவதற்கு உபயோகிக்கின்ற அரிசி எத்தனையோ நிலைகளைத் தாண்டி அரிசியாக உருப்பெற்று பின் சாதமாவது போல் ஆலயத்திலே மஹாகும்பாபிஷேகமும் பலபல நிலைகளைத் தாண்டி மஹாகும்பாபிஷேகமாக நிறைவுறுகிறது. கும்பாபிஷேகத்தின் குறிக்கோள் ஒவ்வொரு கர்ப்பக்கிரகத்திலும் ஸ்தாபிக்கப்படும் விக்கிரகங்களில் இறை சான்னியத்தை நிலைபெறச் செய்வதாகும். அந்த மகத் கைங்கர்யர்யம் -தர்மகர்த்தாக்களாலும் சிவாச்சாரியார்களாலும் சிற்பாச்சாரியர்களாலும் வழிபடும் பக்தர்களாலும் ஏற்படுத்தப்படுகிறது. இந்த மகத் கைங்கர்யத்தைச் செய்த ,செய்வித்த அனைவரும் மஹா கும்பாபிஷேகத்தின் பயனாக எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

'வேத சிவாகம ஞானபாஸ்கரன்'
சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

## கொழும்பு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மஹோற்சவ சிவாசாரியார் சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்து என விளங்கும் இலங்காபுரியில் வடபால் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பதியில் அருளாட்சி செய்துவரும் கலியுகக் கந்தன் மூத்த நயினார் ஆலய புனராவர்த்தன ஜீர்னோத்தாரன கும்பாபிஷேகம் நிகழும் விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 10 ஆம் நாள் (27.10.2010) இன்று நடைபெறும் இந்நாள் நம்மவர்க்கு எல்லாம் பொன்னாளாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளாசி பெற்று இன்புற்று வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி
சிவஸ்ரீ .ந.கேதீஸ்வரக் குருக்கள்

## ஆனைக்கோட்டை திருவருள்மிகு மூத்தநயினார் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புமலர் பெருவிழாவை முன்னிட்டு பிரதம குருவின் ஆசிச்செய்தி

எங்கும் வியாபித்திருக்கும் ஆண்டவனை மன ஒருமைப்பாட்டுடன் வழிபாடியற்றி அவனருள் பெற உகந்த இடம் ஆலயம்.


மன ஒருமைப்பாட்டை பேணும் வகையில் ஆகம விதிமுறைக்கேற்ப பஞ்சதள, திரிதள இராஜ கோபுரங்கள் நிர் மாணிக்கப்பட்டு புனருத்தாரனப் பணிகள் நிறைவேறி பிரபஞ்சம் எங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளை, மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்னியிலும் கும் பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு நூதன மூர்த்தியான வள்ளி தேவசேனா சமேத பாலசுப்பிரமணியப்பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு திருவுருவத்தில் சேர்த்து நிலைபெற்றிருந்து ஆன்ம கோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தல் மஹாகும்பாபிஷேக நோக்கமாகும். இப்படிப்பட்ட மஹாகும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு அனைத்தடியார்களும் இன்று 11.40 வரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய தனுர் லக்ன சுப முகூர்த்தத்தில் நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகத்தை தரிசித்து முருகப் பெருமானின் திருவருளைப்பெற்று பேரானந்தப் பெரு வாழ்வு வாழ்வீராக.


சுப மஸ்து.
கதிர்.கிருஷ்னேஸ்வரக்குருக்கள்
ஆலய பிரதமகுரு

## கொழும்பு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ காமாக்ஷி சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

இலங்காபுரியின் வீணாகானபுரம் என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய புனராவர்த்தன ஜீர்னோத்தாரன மஹா கும்பாபிஷேகம் விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 10 நாள் (27.10.2010) மிகவும் சிறப்பாக நடை பெறுகிறது. இவ்வேளையில் எல்லோரும் எம்பெருமானின் கிருபை பெற்று சகல செல்வங்களுடன் பெருவாழ்வு வாழ முருகன் ஆசி கிடைக்க வேண்டி அமைகிறேன்.

நன்றி
சிவஸ்ரீ காமாக்ஷி சுந்தரேஸ்வரக்குருக்கள்






கமலா ஸ்ரோர்ஸ்
Kamala Stores
பலசரக்கு, வீட்டுப்பாவனைப் பொருட்கள், ஹாட்வெயர் சமான்கள் விற்பனையாளர்கள்
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

சாருஜன் பான்ஸி ஹவுஸ்
தரமான பொருட்களை பெற்றுக் கொள்ள நாடவேண்டி ஒரே இடம்
சாருஜன் பான்ஸி ஹவுஸ்
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.


சங்கவி
தரமான பல சரக்குப்
பெற்றுக் கொ
மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

T.K.T. மார்க்
சுத்தமானதிறம் நல்லெண்ணெய்
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.
LUNCH - OIL
T.K.T Mark
BEST GINGELLY OIL
Thillaiyampalam Kandiah Stores,
Moothanainar Kovilady,
Anaicoddai.
(2267)

சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட
சுத்தமான
வி.எஸ்.எஸ். சாப்பாட்டு
நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்
வ.ச.சுந்தரலிங்கம்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
T.P :- 021 222 2975

சாம்சன்
கட்டிட உபகரணங்கள்
கொங்கிறீற்கற்கள்,
என்ப
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

# ...தேவசேனா சமேத பாலசுப்பிரமணிய ஆலய
# ...கும்பாபிஷேக சிறப்புமலர்- 27.10.2010





## ஆனைக்கோட்டை மூத்தநயினாரை வேண்டுகின்றோம்

ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத பாலசுப்பிரமணிய சுவாமியின் கிருபையால் பாலஸ்தாபன திருப்பணி வேலைகள் அனைத்தும் நிறைவேறி நிகழும் மங்கள கரமான விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 10 ஆம் நாள் (27.10.2010) இன்று கும்பாபிஷேகம் செய்வதற்கு முருகப் பெருமானின் அருளாசி கிடைத்தமைக்கு நாங்கள் மிகவும் சந்தோஷமடைகின்றோம்.

**நன்றி**
**தர்மகர்த்தாக்கள்**
**சி.குமாரதேவா,**
**திலிபன்தியாகராஜா, இ.கஜானந்தன்**

## வாழ்த்துச்செய்தி

ஈழத்திருநாட்டின் மணிமுடியாக விளங்கும் யாழ். நகரிலிருந்து வடபால் அமைந்துள்ள வயலும் வயல் சூழ்ந்த ஆனைக்கோட்டையில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீமூத்த நயினார் கோவில் என வழங்கும் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் அருளாட்சி செய்து வருகிறார்.

நான்காவது மஹாகும்பாபிஷேகம் விகிர்தி வருடம் ஐப்பசிமாதம் 10ஆம் நாள் (27.10.2010) இன்று நடைபெற முருகப் பெருமானின் திருவருள் கிட்டியுள்ளது. இவ்வாலயம் நன்கு புனரமைக்கப்பெற்று கிழக்கே இராஜகோபுரமும் தெற்கே சண்முகப்பெருமானுக்கு தாமரை பூத்த தடாகத்தை நோக்கி இன்னொரு கோபுரமும் நிர்ணயிக்கப்பெற்று கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற முதுமொழிக்கிணங்க எல்லோரும் வணங்கப் பெரும் பாக்கியம் பெற்றுள்ளனர். இவ்வாலயத்தின் பழம்பெரும் தர்மகர்த்தாவான சிவகுரு நமசிவாய முதலியார் பரம்பரையில் உதித்தவர்களும் ஆலய அடியார்களும் ஒன்று சேர்ந்து என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்ற மொழிக்கிணங்க தொன்று தொட்டு திருப்பணியை நிறைவேற்றுவதோடு நான்காவது மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில்**
**க.கதிரேசு**

## வாழ்த்துரை

எல்லாம்வல்ல ஸ்ரீ முத்து விநாயகரினதும் மூத்த நயினாரின் கிருபையாலும் பாலஸ்தாபன திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் எம்முடன் இத்திருப்பணியில் கலந்து கொண்டு எல்லா விதத்திலும் உதவி புரிந்த குடும்பங்கள், முகாமையாளர்கள், நண்பர்கள், ஆனைக்கோட்டை வாழ் மக்கள் மற்றும் மூத்தநயினார் அடியார்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இவர்கள் நலமுடன் வாழ முத்து விநாயகரையும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத பாலசுப்பிரமணியரையும் வேண்டிக் கொண்டு, இனி வரும் காலங்களிலும் எம்முடன் சேர்ந்து மேலும் பணி செய்வதற்கு உதவி புரியுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**நடராஜன் சுப்பிரமணியம்**
**முகாமையாளர்,**
**ஸ்ரீமுத்துவிநாயகர் திருக்கோவில்**
**(கொழும்பு செட்டியார்தெரு)**
**மூத்தநயினார் திருக்கோவில்**
**(ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்)**

மலரமைப்பு:-
S.சுஜிதரன்

**கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டுகள்**

| | | |
|---|---|---|
| 1 வது | கும்பாபிஷேகம் | சர்வதாரி வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் மிருகசீரிட நட்சத்திரத்தில்( 12.09.1888) |
| 2வது | கும்பாபிஷேகம் | ஜல வருடம் ஆவணி மாதம் 07 ஆம் நாள் மிருக சீரிட நட்சத்திரத்தில்(23.08.1954) |
| 3வது | கும்பாபிஷேகம் | ருசி சோற்காரி வருடம் அவிட்டநட்சத்திரத்தில் (30.06.1983) |
| 4வது | கும்பாபிஷேகம் | விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 10 ஆம் நாள் 27.10.2010 |

...ஸ்ரோர்ஸ்
...குப் பொருட்களை
...கொள்ள நாடுங்கள்
சங்கவி ஸ்ரோர்ஸ்

தணிஸ் ரெக்ஸ் &
பந்தல் சேவை
Thanis Tex & Jent Service
T.P:-021 222 2955
மூத்தநயினார் கோவிலடி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
Moothanainar Kovilady,
Navaly Road, Anaicoddai.

சிறி முருகன் கபே
உரிமையாளர் :-
ஐயம்பிள்ளை வரதராஜன்
மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

...ன் Samson
...கள் விற்பனையாளர்கள்
...கள், சல்லிக்கற்கள், மணல் வகைகள்
...என்பவற்றை பெறலாம்
T.P:-021 225 5090
...டை.

தில்லையம்பலம்
கந்தையா ஸ்ரோர்ஸ
T.K.T.சுத்தமான சாப்பாட்டு
நல்லெண்ணை விற்பனையாளர்
மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

சந்திரன் பான்சி பலஸ்
Chandran Kannan
Dealers For Textiles, Fancy Goods and Gift at tems
துரை ஐயா கல்யாண மண்டபம்
திருமண, பூப்புனித, பிறந்தநாள் போன்ற அனைத்து மங்கள கரமான வைபவங்களுக்குரிய பந்தல், மணவறை, பலூன் அமைப்புகள் மற்றும் பாத்திரங்கள் அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.
T.p:-021 222 8606



யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையின் ஆங்கில தின விழா நேற்று பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும்,பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினரான யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.தியாகராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மற்றும் மாணவிகள் பாடல் இசைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:என்.குமார்)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி.ப 2. மணிக்கு சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-29)

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலைய சூழலில் அமைந்துள்ள சந்திநிதியான் ஆச்சிரமத்தில் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் இதழின் 154ஆவது மலர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வெளிடப்படவுள்ளது.

நிகழ்வில் வெளியீட்டுரையினை பருத்தித்துறையைச் சேர்ந்த சி.பத்மநாதன் (ஜே.பி) மதிப்பீட்டு உரையினை சைவப்புலவர் ஆசிரியர் க.நித்தியதசிதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஸ்ரீ-2-52)

## பட்டிமன்றம்

தென்மராட்சி கலை இலக்கிய பேரவையின் இலக்கிய அணியின்ரின் பட்டிமன்றம் நாளை வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சரசாலை பொது நூலகத் தினரால் நடத்தப்படும் மேற்படி பட்டி மன்றம் சமூ கத்தை செம்மைப்படுத்துவதில் பெரிதும் முன்னிற்பது சமயமா? சட்டமா? என்ற தலைப்பில் த.நாகேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது. (ஸ்ரீ-29)

# சர்வதேச, தனியார் பாடசாலைகளின் ஆசிரிய நியமனங்களை பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சர்வதேச மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர் நியமனங்களை பதிவுசெய்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக புதிய கல்விக் கொள்கைத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வியமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவதற்கும் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ள புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தில் இவ்விடயம் இணைத்துக்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் சட்ட திட்டங்களை சர்வதேச பாடசாலைகள் உதாசீனப்படுத்தி வருவதால் அத்தகைய பாடசாலைகள் விடும் தவறுக்களுக்கு அமைச்சே வகை சொல்ல நேர்வதாகத் தெரிவித்த அவர் இந் நிலையைத் தொடர விடமுடியாது எனவும் தெரிவித் தார்.

அண்மையில் சர்வதேச பாடசாலைகளுக்கூடாக வெளியிடப்பட்ட பாட நூல்கள் சம்பந்தமாக பல சர்ச்கைகளும் குற்றச் சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வருகின் றமையைச் சுட்டிக்காட்டிய அவர் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளுக்கு ஆசிரி யர்களை நியமிக்கும்போது அவர்களைக் கல்வியமைச்சில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் முன்னெ டுக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித் துறையை மேம்படுத்தும் வகையில் புதிய கல்விக் கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள கல்விமான்களிடம் இதற்கான கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

இந்த வகையில் கல்வித்துறையில் நிலவும் சகல குறைபாடுகளையும் நீக்கும் வகையில் புதிய கொள்கைத் திட்டம் அமையும்.

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் போது அவர்களின் தகைமைகள் விடயத்தில் எதிர்காலத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

அதற்காகவே தனிய்ார் மற்றும் சர்வ தேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போதும் அவர்களைக் கல்வியமைச்சு பதிவு செய்யவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## திருகோணமலையில் நன்னீர் மீன் பிடித் தொழில் அபிவிருத்தி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தி அபிவிருத்திக்காக மூன்று இலட்சம் மீன் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன.

நீரியல் மீன் பிடித்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே இக் குஞ்சுகளை மூன்று குளங்களுக்கு விடுவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் நன்னீர் மீன் பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வான் அலகுளம், சூரியபுர குளம் மற்றும் கந்தளாய் குளம் ஆகிய குளங்களிலேயே இந்த மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடைவுள்ளன. (ஸ்ரீ-2)

## இலங்கைத் தொழிலாளர்கள் இஸ்ரேல் பயணம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தொழிலாளர்கள் 100 பேர் 6 மாதகாலப் பணிக்காக இன்று புதன் கிழமை பென் குறியொன் விமான நிலையத்தை சென்றடைவார்கள் என்று ஜெருசலம் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த பருவகாலத்தில் இஸ்ரேலிலுள்ள பண்ணையாளர்களுக்கு உதவியளிக்கும் முகமாகவே மேற்படி தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

விவசாயத்துறையில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படும் விதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றத் திட்டமொன்றை இஸ்ரேல் உள்நாட்டு அமைச்சின் குடிசன குடிவரவு மற்றும் எல்லைகள் சபை ஆரம்பித்துள்ளது. (ஸ்ரீ-2)


## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from the qualified contractors for the following works.

| work/ Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs.in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Rehabilitation of Male Hostel (Balance Work ) at Kaithady, University of Jaffna. | 45,000.00 | 400.00 | 4.8 | M 7/C8 (Buildings) |
| Improvements to Lecture Hall facilities and other at Faculty of Agriculcure, University of Jaffna. | 25,000.00 | 400.00 | 2.7 | M 7/C8 (Buildings) |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/Capital Works & Planning University of Jaffna upon producing vaild registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's Counter, University of Jaffna until 03.11.2010.

perfected tender should be sealed and marked with the job and the name of the work/ service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P. Box 57,Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00p.m on 10.11.2010 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.


Tender forms may be inspected by the tenderers free of change at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

*P.O Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*
*25.10.2010.*

(C-1468)

*Registrar*
*University of Jaffna.*

# எதிர்காலத்தை முன்கூட்டியே சொல்லும் ஆற்றல் படைத்தவர்



ஒருவரது ஜாதகத்தில் லக்கினத்துக்கு இரண்டாம் இடத்தில் உள்ள கிரகம் சிறந்த பாவத்திலும், ,இரண்டாம் வீட்டில் சுகக்கிரகமும் இருந்தால் ,அந்த அமைப்பை உடைய ஜாதகர் ,பூர்வீக சொத்துக்கள் உள்ள வராகவும் ,மற்றவர்களை விட அவர் சிறப்பான, உயர்ந்த குணமுள்ளவராகவும், ஏராளமான செல்வத்திற்கு அதிபதியாகவும் அழகும் ,சிறப்பும் பொருந்திய இலட்சணமான முகத்தோற்றத்தைப் பெற்றவராக இருப்பார், அந்த ஜாதகர் பின்னால் வரக்கூடியவைகளை உணர்ந்து சொல்லும் திறமையும்,அறிவும் பெற்றவராக இருப்பார்.

## அனுபவ அறிவு மிக்கவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிற்கு உடையவரோடு,சனி சம்பந்தப்பட்டிருக்குமானால், அந்த ஜாதக குறைவான கல்வி அறிவோடு விளங்குவார். படிப்பில் அதிக ஊக்கம் இராது. கொஞ்சமான கல்வி அறிவுடனும் ,அனுபவ அறிவு சற்று அதிகமாகவும் இருக்கும்.




# ஆடிட்டர் ஆகும் ஜாதக அமைப்பு

ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிற்குடையவர் புதனுடன் சம்பந்தமுடையவராக இருந்தால் ,அந்த அமைப்பை உடைய ஜாதகர் ,அர்த்தசாத்திரத்தில் நிபுணத்துவம் பெற்று விளங்குவார். கணக்குகளில் புலமையும் ,வரவு செலவுகளில் பாண்டித்தியமும் பெற்றிருப்பதோடு கணக்கு சம்பந்தமான உயர் பதவிகளில் பணியாற்றும் திறமை பெற்று விளங்குவார். ஆடிற்றர்களாகவும்,பொருளாதார நிபுணராகவோ , அறிவும் திறமையும் வல்லமையும் பெற்று விளங்குவார்.

| | | | |
|---|---|---|---|
| | புதன் சுக்கிரன் சூரியன் | ராகு | சந்திரன் |
| | ராசி | | லக்கனம் |
| | | | செவ்வாய் |
| சனி | கேது | | |

# சிலருக்கு அடிக்கடி விபத்துகள்ஏற்படுவது ஏன்?



ஒருவர் ஜாதகத்தில் லக்கினாதிபதி வலிமையுடை யவனாக நல்ல இடத்தில் இருந்தால் , அந்த ஜாதகர் ,சுகமான வாழ்க்கை பெற்றவராக இருப்பார். அவருக்கு கொஞ்சம்,கொஞ்சமாக முன்னேற்றம் ஏற்பட்டு நல்ல வாழ்க்கை வசதிகள் ஏற்படும்.

சிறந்து விளங்கும் வாழ்வைப்பெற்று எல்லா வழிகளிலும் பலமுடையவனாக இருப்பான். ஆனால் லக்கினம் பலம்பெறாமலும் லக்னாதிபதி வலிமை இல்லாதவனாகவும் இருந்தால் அந்த அமைப்பை உடைய ஜாதகர் அடிக்கடி விபத்துக்களைச் சந்திப்பவராகவும் மனவருத்தம் உடையவராகவும் வியாதிகளாலும் ஆரோக்கிய குறைகளால் கஷ்டங்களை எப்பொழுதும் அனுபவிப்பராகவும், இருப்பர். வாழ்க்கை, சிறப்பாக அமைய லக்னாதிபதி பலம் பெற்றும், நல்ல இடத்தில் அமைந்தும், சுப கிரகங்களால் பார்வை பெற்றும் இருக்க வேண்டும்.

## நன்மை செய்பவர்

ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிற்கு உடையவனுடன் சூரியன் சம்பந்தம் பெற்று இருக்குமானால் ,அந்த அமைப்பை உடைய ஜாதகர் ,உலகத்திற்கு நன்மை செய்யும் படியான தகுதிகளைப் பெற்றிருப்பர். அவர் சிறந்த கல்வி அறிவும், மிகுந்தசெல்வமும் பெற்றிருப்பார். மக்களால் சிறப்புப் பெற்று, போற்றும் படியான வாழ்வைப் பெற்று விளங்குவார்.

# எதற்கும் அஞ்சாத குணம்உள்ளவர்...



ஒருவர் ஜாதகத்தில் லக்னாதிபதி கேந்திரத்திலோ அல்லது தன்னுடைய உச்ச வீட்டிலோ அல்லது சொந்த வீட்டிலோ இருந்து அந்த வீடு அஸ்தமனம் அடையாமல் இருப்பதோடு, எட்டவாது வீட்டுக்குடையவன் கேந்திரம் தவிர இதர இடங்களில் இருந்து லக்கினத்தில் சுபகிரகம் இருக்குமானால்,அந்த அமைப்பை உடைய ஜாதகர் திடகாத்திரம் உடையவராகவும் இருப்பார். அவருக்கு செல்வம் அதிகம் இருக்கும். நல்ல சாத்வீக குணம் அமைந்திருக்கும். அரசாங்கத்தால் போற்றப்படுபவராக அந்த ஜாதகர் இருப்பார். ஏராளமான சொத்துக்கள் ,வீடுகள் ,நிலம்,மனைகள், வேலைக் காரர்கள், வண்டிகள் ,வாகனங்கள் போன்றவைகளோடு,செல்வாக்கோடும் இருப்பார். அழகு பொருந்திய மேனியை உடையவராகவும்,உறுதியான நோயற்ற உடலைப்பெற்றவராகவும் இருப்பார்.

அவருக்கு தர்மம் செய்வதில் மிகுந்த விருப்பம் இருக்கும் எதற்கும் அஞ்சாதவராகவும் உயர்ந்த குணங்களைப் பெற்றவராகவும் மற்றவர்களால் பாராட்டப் பெற்றவராகவும் இருப்பார்.

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்ட பரிந்துரைகள் விரைவில் முன்வைக்கப்படும்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கான தமிழ் அரசியல் கட்சிகளின் தீர்வுத் திட்டம் எதிர் வரும் டிசம்பர் மாதமளவில் முன்வைக்கப் படும் என தமிழ்த்தேசிய விடுதலைக்கூட்டமைப் பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் பத்து தமிழ் அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்ற போதிலும் இதில் ஒரு கட்சியே பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி.கட்சியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றார் எனக் குறிப்பிடப்படுகிறது.

பாராளுமன்றில் 13 ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி இதுவரையில் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளை கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் சனிக்கிழமை மீளவும் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு கூடி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் பத்து சந்திப்புக்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் சந்திப்புக்களில் சாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை அல்லது நாளை மறுதினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப் படவுள்ளதாகவும் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தேர்தல் முறைகேடு தொடர்பான மனுவிற்கு ஜனாதிபதி ஆட்சேபம்

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் முறை கேடு தொடர்பான மனுவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சேபம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் தவணைக்காலத்தை இரத்து செய்யுமாறு தெரிவித்து சரத் பொன்சேகா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எனினும் இந்த மனுவை நிராகரிக்குமாறு தெரிவித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்றில் ஆட்சேப மனுவொன்றை தமது சட்டத்தரணியின் ஊடாக தாக்கல் செய்துள்ளார். உச்ச நீதிமன்றில் இந்த ஆட்சேப மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் மோசடிகளோ அல்லது முறைகேடுகளோ நடைபெற்றமைக்காக எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது என ஜனாதிபதி தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சட்ட மூலத்தின் அடிப்படைத் தேவைகளை சரத்பொன்சேகா பூர்த்தி செய்யவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

தேர்தலில் மோசடி இடம்பெற்றதாகவும் இதனால் தேர்தலை சூன்யமாக்கி தம்மை ஜனாதிபதியாக அறிவிக்குமாறு சரத்பொன் சேகா கோரியிருந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டதாக போலிப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச, ஜனாதிபதி வேட்பாளர் சரத் கோங்காஹே உள்ளிட்ட பலர் தேர்தல் தினமன்று அரச ஊடகங்களில் தமக்கு எதிராக பிரசாரம் செய்ததாகவும் சரத் பொன்சேகா தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். (ஸ்ரீ-2)

# எரிபொருள் மோசடியில் ஈடுபட்ட கடற்படை உத்தியோகத்தர்கள் கைது

219 இலட்சரூபா பெறுமதியான எரிபொருள் மோசடியில் ஈடுபட்ட கடற்படை உத்தி யோகத்தர்களை பொலிசார் கைது செய்துள் ளனர். தங்காலை கடற்படை முகாமில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களே இவ்வாறு எரிபொருள் முத்திரை மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கடற்படை உத்தியோகத்தர்கள் எரிபொருட்களை நிரப்பிக் கொள்வதற்காக வழங்கப்படும் உத்தியோகபூர்வ முத்திரைகளை மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற்படையில் சேவையாற்றும் மூன்று உத்தியோகத்தர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

எரிபொருள் நிரப்புவதற்காக வழங்கப்படும் உத்தியோகபூர்வ முத்திரைகளை வெளியாருக்கு விற்பனை செய்து இவர்கள் பணம் சம்பாதித்துள்ளனர். உயர் கடற்படையதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப் பாட்டை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் எரிபொருள் முத்திரைகளை குறித்த நபர்கள் மோசடியான முறையில் வெளியாருக்கு விற்பனை செய்து வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை குண்டு வெடித்ததில் இரண்டு பெண்கள் உட்பட ஆறு பேர் பலியாகினர். 15 பேர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தை படத்தில் காணலாம்.

# உலகின் மிகப்பெரிய சோலார் மின்னுற்பத்தி நிலையம்

(வோஷிங்டன்)

உலகின் மிகப் பெரிய சோலார் ( சூரிய ஒளி) மின் உற்பத்தி திட்டத்திற்கு அமெரிக்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்காவில் மின் தேவையினை பூர்த்தி செய்வதற்கு காற்றாலை , சூரியஒளி மூலம் மின் உற்பத்தி செய்ய அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் அடிப்படையில் நிலக்கரி, எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்திக்கு இணையாக சோலார் மின் உற்பத்தி நிலை யம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டது.

இது குறித்து உள்துறை அமைச்சர் கென்சலாஜர் கூறுகையில்,

அமெரிக்காவின் மின்தேவையினை ஈடுகட்ட ஆயிரம் மெகாவோற் உற்பத்தித் திறன் கொண்ட சோலார் மின் உற்பத்தி மையம் கலிபோர்னியா மாகாணத்தின் பிளைத்தி எனும் நகரில் அமையவுள்ளது.

இது உலகின் மிகப்பெரிய சோலார் மின் உற்பத்தி நிலையம் ஆகும்.சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத இந்த திட்டத்தின் மூலம் 7 இலட்சத்து 50 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கும்.

இந்த திட்டத்திற்கான நிலம் பிளைத்தி நகரில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 750 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தினை தாங்கும் குழாய்கள் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஒரு மணித்தியாலத்தால் பின்னோக்கி நகரும் நேரம்

வருடத்தின் நீண்ட மாதமாக ஒக்டோபர் மாதம் அமைவதால் உலகெங்கும் உள்ள பல நாடுகள் ஞாயிற்றுக்கிழமை முதல் நேரத்தை வாரமொன்றுக்கு ஒரு மணித்தியாலத்தால் பின்னோக்கி சரி செய்ய ஆரம்பித்துள்ளன.

ஸ்கொட்லாந்தை பிறப்பிடமாகக் கொண்ட கனேடிய பொறியியலாளரும் கண்டு பிடிப்பாளருமான சான்ட் போர்ட் பிளேமிங் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட உலகளாவிய நியமந்தராதர நேர வலயங்கள் தொடர்பான தரவுகள் கடந்த 1883 ஆம் ஆண்டில் அமெரிக்க ஆதரவைப் பெற்றது. தொடர்ந்து 1884 ஆம் ஆண்டில் வோஷிங்டனில் நேர வலயம் தொடர்பான இந்த உடன்படிக்கையில் 26 நாடுகள் கைச்சாத்திட்டன. தற்போது 110 நாடுகள் வருடம் ஒன்றுக்கு தமது நேரத்தை இரு தடவைகள் சீர் செய்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மியன்மாரில் வீசிய கடும்புயலால் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம்

(யாங்கூன்)

மியன்மாரின் மேற்கு கடலோரப் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி வீசிய கடும் புயலால் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை காலி செய்து முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

மியன்மாரின் மேற்குப் பகுதியில் வங்கக் கடலில் மணிக்கு 177 கிலோ மீற்றர் வேகத்தில் 'கிரி' என்ற புயல் காற்று வீசியது. இதில் கடலோரப் பகுதியில் அமைந்திருந்த வீடுகள் சேதம் அடைந்தன. பெரும்பாலான வீடுகள் மூங்கிலால் ஆனதால் அவை தூக்கி வீசப்பட்டன. இதனால் மக்கள் வீடுகளை இழந்து விதிக்கு வர வேண்டியதாயிற்று.

புயலால் பலத்த மழையும் பெய்து வெள்ளம் பெருக்கெடுத்ததில் வீடுகள் வெள்ளத்திலும் மூழ்கின. புயல் வெள்ளத்தால் பாதித்த மக்களுக்கு கியாயுக்கியூ என்ற இடத்தில் செஞ்சிலுவை சங்கத்தால் தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் வீடுகளை இழந்த சுமார் 5 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முறையாக நிவாரணப் பணியை அந்நாட்டு இடைக்கால இராணுவ அரசு மேற்கொள்ள வில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. புயலின் பாதிப்பு குறித்து கூட அரசு எவ்விதத் தகவலும் தெரிவிக்கவில்லை.

ஆனால், முகாம்களுக்கு வந்து புயலால் பாதித்த மக்களை பார்த்து சென்றுள்ளார் அந்நாட்டு சமூக நலத்துறை அமைச்சர். ஆனால் அவர் மக்களுக்கு எவ்வித உதவிக்கான உறுதியையும் அளிக்கவில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கியாயுக்பியு பகுதியில் 70 சதவீத வீடுகள் புயலால் சேதம் அடைந்துள்ளன. அரசு மருத்துவமனை கடுமையாக சேதம் அடைந்துள்ளதாக அந்த ஊர்வாசி ஒருவர் தெரிவித்தார். கடந்த சில தினங்களாக தொலைத்தொடர்பு சேவையும் துண்டிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முறையாக நிவாரணப் பணியை மேற்கொள்ளாத அந்நாட்டு இடைக்கால இராணுவ அரசு மீது சர்வதேச அளவில் விமர்சனம் எழுந்துள்ளது.

இதற்கு முன்னதாக 2008 இல் மியன்மாரை நர்கிஸ் என்ற புயல் தாக்கியது. இதில் 80 இலட்சம் கட்டடங்கள் இடிந்தன.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். (ஸ்ரீ-2)

# காஷ்மீர் குறித்து தெரிவித்த கருத்தை அருந்ததிராய் திரும்பப்பெறவேண்டும்

## காங்கிரஸ் கட்சி வலியுறுத்து

(அலகாபாத்)

காஷ்மீர் குறித்து தெரிவித்த கருத்தை எழுத்தாளரும் சமூக ஆர்வலருமான அருந்ததிராய் திரும்பப்பெறவேண்டும் என காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக எப்போதும் இருந்ததில்லை. இது வரலாற்று உண்மை.

இந்திய அரசுக்கும் இது தெரியும் என கருத்தரங்கொன்றில் அருந்ததிராய் தெரிவித்திருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தியாவின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான அருந்ததிராய், இதுபோன்று பொறுப்பற்ற வகையில் கருத்துத்தெரிவிப்பது உண்மையில் எதிர்பாராதது என அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் சத்தியப் பிரகாஷ் மாலவியா தெரிவித்தார்.

அவரது கருத்து இந்தியாவையும், சர்வதேச சமூகத்தையும் தவறாக வழி நடத்தும் என்பதால் வரலாற்று உண்மைகளுக்கு மாறான அக்கருத்தை திரும்பப் பெற வேண்டும் என சத்தியப்பிரகாஷ் வலியுறுத்தினார். (ஸ்ரீ-2)

# எந்திரன் கதை என்னுடையது; தமிழ் எழுத்தாளர் பொலிஸில் புகார்

(சென்னை)

கடந்த 1996 ஆம் ஆண்டு தான் எழுதிய சிறுகதையில் இருந்து நடிகர் ரஜனிகாந்த் நடித்த எந்திரன் திரைக்கதையை உருவாக்கியுள்ளனர் என எழுத்தாளர் ஆரூர் தமிழ் நாடன் சென்னை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

ஆரூர் தமிழ் நாடன் என்கிற அமுதா தமிழ் நாடன் தனது வழக்கறிஞர்களுடன் வந்து பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் இது தொடர்பாக புகார் செய்தார்.


கடந்த 1996 இல் ஜுஹிபா என்ற பெயரில் தான் எழுதிய சிறுகதை ஒரு இதழில் வெளியானது. அந்த சிறுகதையில் இருந்து எந்திரன் திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழ் நாடன் அதில் குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக படத்தின் தயாரிப்பாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்ததாக தமிழ்நாடன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உப்புத் துகள் அளவில் பற்றரி; விஞ்ஞானிகள் புதிய முயற்சி

உலகிலேயே மிகச் சிறிய அளவில் அதாவது உப்புத் துகள் அளவில் பற்றரி களைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகச்சிறிய பற்றரிக ளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மிகச் சிறிய கருவிகள் மற்றும் நானோ தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் கருவிகளுக்கு மின் ஆற்றல் அளிப்பதற்கு இத்தகைய பற்றரிகள் உதவும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சிறிய பற்றரிகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள கலிபோர்னியா பல்கலை வேதியியல் பொறியியல் துறை பேராசிரியை ஜேன்சிங் கூறுகையில், இப்போதுள்ள லிதியம் வகை பற்றரிகளில் உள்ள மின் அடர்த்தி மற்றும் மின் ஆற்றல் இந்த சிறிய உப்புத் துகள் வடிவில் உள்ள பற்றரிகளிலும் இருக்கும்படி நாங்கள் தயாரித்து வருகிறோம் என்றார். (ஸ்ரீ-2)



ஜப்பான் சென்றிருந்த இந்திய பிரதமர் மன்மோகன் சிங் (இடது), தலைநகர் டோக்கியோவில் பத்திரிகையாளர்கள் சந்திப்பு கூட்டத்தில் உரையாற்றினார். அருகில் ஜப்பான் பிரதமர் நெட்டோகான் காணப்படுகின்றார்.

நீங்கள் கற்றுக் கொடுக்கும் கல்வி ஒரு குழந்தையை மகாத்மாவாக்க வேண்டும் என்பதில்லை; மனிதனாக ஆக்கினால் போதும்.

~ சர் சையத் அஹமத்கான்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஒழுக்கம் ஏலம் போகும் அபாயம்! எச்சரிக்கை!... எச்சரிக்கை!...

பாலியல் கல்வியை பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்ற கருத்து அண்மையில் இந்த நாட்டில் எழுந்ததுண்டு.

பாலியல் கல்வியை கற்பிப்பதன் ஊடாக கலாசாரப் பிறழ்வுகள் ஏற்படும் என ஒரு தரப்பும்,

பாலியல் தொடர்பான அறிவில்லாத போது பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று இன்னொரு தரப்பும் கருத்து வெளியிட்டன.

ஒழுக்கம் தொடர்பிலும், பண்பாட்டு விழுமியம் மீதும் அதீத பற்றுக் கொண்டவர்கள் பாலியலை மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது. அது மறைமுகமாக இருப்பதே ஒழுக்கவியலுக்கு உகந்தது என்று தமது வாதத்தை முன்வைத்தனர்.

மறுதரப்பில் மருத்துவர்கள், உளவியல் சார்ந்தவர்கள், ஆற்றுப்படுத்தும் பணியில் ஈடுபடுவோர் மற்றும் மேலிடம் முன்வைக்கும் கருத்துக்களை நியாயப்படுத்துவதை மட்டுமே தொழிலாகக் கொண்டவர்கள் பாலியல் பற்றிய அறிவின்மை காரணமாகவே பல தவறுகள் நடக்கின்றன எனவும் பாலியலைப் போதிக்கும் போது மாணவர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் என்றும் தமது நியாயப்பாட்டை தெரிவித்தனர்.

இதில் எது சரி, எது பிழை என்ற முடிபுக்கு வருவதற்கு "ஆய்வு" தேவையாக இருக்கும்.

ஆனால் இத்தகைய ஆய்வுகளுக்கு எங்கள் மண்ணில் இடமில்லை. எனவே பொதுமையில் நின்று ஆராய்வதே தற்போதைக்கு உகந்ததாகும்.

பாலியல் கல்வியை போதிக்கும் மேற்குலக நாடுகளின் கலாசாரம் எத்தன்மையதென்பதை அறிந்தவர்கள், ஐயா! அப்படி ஒரு கல்வியும் வேண்டாமெனக் கூறிடுவர்.

அந்தளவிற்கு அங்குள்ள நிலைமை மிகவும் மோசமானதாகும். அத்தகையதொரு நிலைமை நம் மண்ணில் தோற்றம் பெற்று விடும் அபாயம் இருப்பதை உணரும் போது நெஞ்சம் வெடித்து விடும் போல் இருக்கின்றது.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் எங்கள் நிலைமை துன்பத்துக்கு மேல் துன்பம்.

கடந்த வருடம் நடந்த வன்னி யுத்தம் எங்கள் உதிரத்தை உப்புநீராக்கியது. அதிலிருந்து மீள்வதற்குப் பல வருடங்களாகும் என்ற கணிப்பில், தற்போது எங்கள் மாணவர்சமூகத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் வெளிவரும் அதிர்ச்சித் தகவல்கள் புத்திர சோகத்தால் உயிர்நீத்த தசரதனுக்கு ஏற்பட்ட அவலத்தைத் தரவல்லது.

பெற்றோரின்கண்காணிப்பு, ஆசிரியர்களின் வழிப்படுத்தல், சமூகப்பார்வை, கூடவே ஆலோசனை வழிகாட்டல் என்ற புதுச்சோடனை என எல்லாம் இருந்தும் ஏன் இப்படி?

ஆக, எங்கோ கோளாறு இருக்கின்றது. கையடக்கத் தொலைபேசி, இணையத்தளங்களின் பயன்பாடு, நாகரிகம் என்ற போர்வைக்குள் நடக்கும் எதிர்ப்பால் நட்பு, கூடவே பாலியல் பற்றிப் போதிக்கத் துடிக்கும் பாட அலகுகள் இவை எல்லாம் சேர்ந்து எங்கள்ஒழுக்கவியலை ஏலத்தில் விற்றுவிடத் துடிக்கின்றன.

தடுத்து நிறுத்தாவிடில் "அந்த விடயத்தில்..." மேற்குலகை விட நாங்கள் முன்னணி என்று கூறும் அளவிற்கு பெருந் துயரம் ஏற்படும் அபாயம் உண்டு. எச்சரிக்கை.

வேண்டுமானால், பாலியல் கல்வி தேவையா? இல்லையா? என்ற விவாத அரங்கிற்கும் களம் அமைக்கலாம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சை அலகின் கலை முதற் தேர்வு முடிபுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவின் 2007/2008 ஆம் ஆண்டுக்கான கலை முதற் தேர்வு பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப் பெறுபேற்று அறிக்கைகளை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்தி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

கு.ஜேம்ஸ் பஸ்ரியன், செ.கிரிதரன், ஆ.காண்டீபன், பொ.பார்த்தீபன், ரா.ரஜீந்திரன், சி.சிவகரன், சி.சௌசிகன், திருமதி சுதர்சினி சிவேந்திரன், திருமதி பத்திமா ரிப்ஹா ராஜனி சந்திரசேகரன், ப.ஜெயசீலா, செல்வி சி.மாலினி, செ.தயாகரன், வி.ஜெயநேசன், அ.நவேந்திரராஜா, அருட்சகோதரி மேரி அன்ரனீற்றா, கு.நந்தகுமார், வே.புவனேந்திரராஜா, தா.ராதிகா, செ.சிவதர்சினி, து.சுஜாத்தா, மா.கார்த்திகா, அ.கவிதா, ம.கவிதா, ரா.கோணேஸ்வரன், க.கோசலா, ஜெ.நிதாஷன், திருமதி நளினா பிரேம்லால், ம.ரகீதா, பு.ராஜகுமாரன், ஸ்ரீ.ரஜனா, வி.சாரஸ்கன், ந.திருவாணி, பா.துர்க்கா, ப.துவாரகா, தி.உமாகாந்தன், திருமதி லஜிதா உதயகுமார், இ.வத்சலா, எட்வேட் எட்வினா, மு.அருந்தஷா, வி.தர்மினி, க.கபிலன், பே.நிந்தாகினி, ம.பிரிந்தா, அ.ராகினி, மு.சுதாஷினி, த.தனஞ்ஞன், பொ.தனயந்தி, இ.தயாளினி, ந.விஜிதா,

இ.இராஜமுகுந்தன், இ.இருதயதாஸ், இ.அனிதா, உ.அனிஷா, செ.அனுசியா, திருமதி சுபாஜினி அருள்குமரன், யோ.பாமினி, ம.கிறிஸ்ரியன் சிரானி, பிலிப்பையா யூஜின் நிவேதா, ச.யமுனாவதி, வி.ஜனனி, ம.ஜெனியாழினி, ஜே.ஜெசிராஜிகா, திருமதி ஜெகந்தா சதீஸ், கா.ராஜேந்திரன், அ.கவிதா, சு.கவிதா, ஜோ.கவியரசி, சி.கௌசல்யா, அ.கௌசிகா, து.லலிதா,குலவன், ஜெ.லக்ஸ்சிகா, ம.தனுசியா, பா.மதுராந்தகி, சி.மதுயுதாயா, த.மயூரி, மா.மீரா, ஆ.மைதிலி, கு.நமிலா, பி.நாதலோயினி, வே.நிஷாந்தினி, பு.நிஷாந்தி, ப.பகீரதி, திருமதி சி.பாகியராஜா, த.பிரபாகினி, சி.பிரஷாந் அருள்தீபன், தே.பிரியதர்ஷினி, சி.ரதிபிரியா, ஞா.ரவிசங்கர், பே.லூசியன் றோசி லூகினி, ஜெ.சர்வதமன்னன், சி.சசிகலா, த.சசிரேகா, செ.சதாயினி, சி.சதீஷ், திருமதி தயாளினி சற்குணராஜேஸ்வரன், ஜீ.செல்வநாயகி, திருமதி ஜீவவதனி சாந்தகுமார், சி.சாந்தினி, க.சோபா,சி.சுரேகா, க.சிந்துசா, பூ.சிவதர்சினி,

ஸ்ரீ.சோனியா, லோ.சோபிகா, வ.சுபாசினி, ந.சுபாசினி, க.சுமித்திரா, திருமதி மேரி ஷகிலா சுரேந்திரன், பா.சுதர்சினி, ம.தட்சாயினி, ச.தர்சனன், த.தர்சிகா, வி.தர்சினி, த.தாசன், ம.துளசி, ஜெ.துவாரகா, கு.உஷாஜினி, ச.உஷாந்திகா, யூ.வித்தியா, ம.அயந்தமேரி, த.அஜிந்தா, ஜெ.அமரநாத், கு.அமுதகௌரி, ம.ஆன்சாமினி, இ.அனுஷா, க.அருள்குமரன், பா.ரஜிதா, ம.பாமினி, த.டல்சி, சு.தர்மினி, சி.டிசானா, ம.எலிஸ் ஏஞ்சல்ஸ், ந.கிரானு, திருமதி நந்தினி ஞானரூபன், திருமதி சிந்துஜா கௌரிசங்கர், தி.யாழினி, ஜ.ஜெயதர்சினி, ஜீ.ஜீவனா, கு.ஜீவிதா, ம.ஜீன் நிறோஜினி, இ.ஜெனிட்டா, சி.ஜெனிட்டா ஜோதினி, திருமதி சாமினி ஜெனோஜெனராஜ், ஆ.ஜெயபாலசிங்கம், ம.ஜெயமிதூன், இ.ஜிந்துரூபி, அ.யூடா சுசாந்தி, சு.யூட் திலீபன், பு.யூலன், ப.கஜலட்சுமி, அ.கஜன், வி.கஜீதா, வே.கலைச்செல்வன், ந.காஞ்சனா, க.கனிதா, யோ.கார்த்திகா.

க.கவிதா, அ.கீர்த்திகா, சி.கீதாயினி, ம.கிதுசா, கி.கிரிசா, கி.கியோமர், க.கோகிதா, வி.கமலேஸ்வரி, பா.குகனி, இ.குமுதினி, ம.குணசாந்தினி, சோ.லக்சிகா, சு.லலிதாகுமார், கி.லிசாந்தி, வ.லோஜினி, ஜெ.மரியதர்சினி, அ.மேரி ஜெபோஜினி, ம.மேரி விஜிதா, நா.மதுரா, செ.மதுரா, செ.மதுரா, ஸ்ரீ.மயூரன், ப.மயூரி, க.மீரா, செ.மேகலா, கு.மிதுலா, நா.மோகனதாஸ், க.முல்லைமாறன், சி.நராயினி, ஜெ.நர்மதா, க.நதியா, பூ.நவஜோதி, க.நிலானி, ப.நிரஞ்சனா, க.நிரோஜினி, கு.நிருஜன், கீ.நிசானி, மு.நிசாந்தினி.

சோ.நித்தியா, ஞா.பசில்டா, அ.பொல்காடிங், க.பிறேமிளா, செ.பிரியங்கா, பொ.நிவேதா, கு.பிரிந்தாவனி, த.பிரியா, வி.ரகுபதி, வி.இராஜமுகுந்தன், அ.றமிலா, அ.றம்மியா, து.ரஞ்சித்குமார், து.ராதிகா, சி.ராதிகா, தி.ராதிகா, பா.ரவிப்பிரியா, கோ.றெனாட், இ.ரேணுகா, செ.றோசாமேரி, சோ.சஞ்ஜீவன், வே.ருசாந்தினி, வி.சரளா, இ.சரிதா, அ.சர்மிளா, க.சாருஜா, ம.சசிகலா, ச.சசிவினோயா, சி.சத்தியபாமா, ச.சத்தியவதனி, கு.சயந்தினி, செ.சென்றோஜி, ஜெ.சேந்தன்.

(தொடரும்...)

# இலவச வைத்திய சேவை

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள பொது நல்நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை இலவச வைத்திய சேவை இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்திய சாலை பொதுவைத்திய நிபுணர் டாக்டர் ரி.பேரானந்தராஜா, மார்பு இருதய நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.லக்ஸ்மன் மற்றும் சிரேஷ்ட வைத்திய நிபுணர்கள் வருகைதந்து இலவச சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

அத்துடன் இ.சி.ஜி.பரிசோதனைகளும் வைத்தியத்திற்கான மருந்துவகைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதில் ஆலயச் சுற்றாடலிலும் அயல் ஊர்களிலும் உள்ள மக்கள் கலந்து பயன் பெறலாம் என ஆலய பரிபாலன சபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் சிறுபான்மை கட்சிகளுக்கு பாரிய அநீதியை ஏற்படுத்தும்

## உயர்நீதிமன்றத்தில் பேராசிரியர்கள் மனுத்தாக்கல்

நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உத்தேச உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என அறிவிக்குமாறு கோரி இரண்டு மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ரஞ்சித் அமரசிங்க, நவரட்ண பண்டார ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதுடன், மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

உத்தேச உள்ளூராட்சி சபைத்தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் சிறுபான்மை கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கு பெரும் அநீதியை ஏற்படுத்தும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் சிறுபான்மை கட்சிகள் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்து கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். இந்த காரணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசிய லமைப்புக்கு முரணானது என அறிவிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் உயர்நீதி மன்றத்தை கேட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின்

## சிக்காக்கோ சொற்பொழிவுகள்



இரக்கமற்ற விதிகளின் ஒரு பயங்கரத் தொகுதியை வேதங்கள் கூறவில்லை, காரணகாரியம் என்னும் எல்லையற்ற சிறைச்சாலையை அறிவிக்கவில்லை. ஆனால் இந்த விதிகளுக்கெல்லாம் முடிவில், சடம் சக்தி ஆகியவற்றின் ஒவ்வொரு சிறு பகுதியின் உள்ளும் புறமும் ஒருவன் இருக்கிறான். 'அவனது கட்டளையால் தான் காற்று வீசுகிறது, நெருப்பு எரிகிறது, வானம் பொழிகிறது, உலகில் மரணம் நடைபோடுகிறது' என்று கூறுகின்றன.

அவனது இயல்புதான் என்ன? அவன் எங்கும் நிறைந்தவன், புனிதமானவன், உருவற்றவன், எல்லாம் வல்லவன், பெருங்கருணையாளன். 'அப்பனும் நீ, அன்னையும் நீ, அன்புடைய நண்பனும் நீ, ஆற்றல் அனைத்தின் தோற்றமும் நீ, எமக்கு வலிமை தந்தருள்வாய்! புவனத்தின் சுமையைத் தாங்குபவனே, இந்த வாழ்க்கையின் சுமையைத் தாங்க நீ எனக்கு அருள் செய்வாய்!, வேத முனிவர்கள் இவ்வாறு பாடினர். அவனை எப்படி வணங்குவது? அன்பினால், இம்மையிலும் மறுமையிலும் உள்ள எதையும் விட அதிக அன்புக்கு உரியவனாக அவனை வழிபட வேண்டும். வேதங்கள் முழுங்குவதும் இந்த அன்பு நெறியையே. கடவுளின் அவதாரம் என்று இந்துக்கள் நம்பிப் போற்றும் ஸ்ரீகிருஷ்ணர் அதை எப்படி வளர்த்தார், மக்களுக்கு போதித்தார் என்று பார்ப்போம்.

# மரண அறிவித்தல்

## முருகன் இராசையா (இராசு)

*(முன்னாள் C.T.B. சாரதி)*

சோடாக்கடை ஒழுங்கை, ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முருகன் இராசையா (இராசு) (முன்னாள் C.T.B. சாரதி) 26.10.2010 செவ்வாய்க் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் நேசமணியின் அன்புக் கணவரும் அமரர்களான சுந்தரம், சின்னக்கிளி, தம்பையா, தங்கன் மற்றும் இராசம்மா, செல்லத்தம்பி (சின்னராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் ராஜகுமாரி (அமெரிக்கா), இராஜேஸ்வரன் (அமெரிக்கா), இராஜலட்சுமி (லண்டன்), இராஜரமணன், இராஜகாந்தன், இராஜகமலம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மற்றும் ஜெயபாலன் (அமெரிக்கா), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), ரஜினாவதி (கனடா), நிமாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஷ், நர்மதா, மதுசன் (அமெரிக்கா), டிலக்ஷன், கரிஷனா, பவித்திரன், சுயந்தன் (லண்டன்), விதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இறுதிக் கிரியை பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

சோடாக்கடை ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

தகவல்,
குடும்பத்தினர்.

(சி/1472)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பரிசோதகரும் உடுவில் கிளைத்தவம் பேக்கறி உரிமையாளருமாகிய திரு. ஜெ. பாஸ்கரன் அவர்களின் மாமனார்

***அமரர் திரு. இராஜசுந்தரம் சிவராமலிங்கம்***

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினரும்,
அங்கத்தினர்களும்,
பணியாளர்களும்.

(சி/1470)

# மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள உள்ளூராட்சி சபை திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ் வொன்று நேற்று முன்தினம் கண்டியில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, புதிய திருத்தச் சட்ட மூலம் காரணமாக மாகாண சபை உறுப்பினர்களது எண்ணிக்கை குறை வடையும் என சிலர் தெரிவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செய்தி யில் எந்தவித நம்பகத் தன்மையும் இல்லை யென அவர் தெரிவித்துள்ளார்.

இந் தப் புதிய திருத்த சட்ட மூலத்திற்கு அமைய மாகாண சபை உறுப்பினர்களது எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் திருப்பியனுப்பப்படுவர்

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

அவுஸ்திரேலிய அரசாங்கம், அகதிகளுக்கான புதிய தடுப்பு முகாம்களை நிறுவினாலும் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் பிரன்டன் ஓ கோனர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா, தமது நாட்டுக்கு வரும் அகதிகளை தங்க வைப்பதற்காக கிழக்குத் திமோர் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

எனினும் இதனை கொண்டு வரும் அகதிகளை தமது நாடு திருப்பி அனுப்பாது என்ற தகவல்களில் உண்மை இல்லை என பிரன்டன் ஓ கோனர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய கண்காணிப்புக் கருவி

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு புகைப்பட கருவி நேற்று முன்தினம் முதல் தொழில்படுகிறது.

இந்தத் தகவலை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் டப்ளிவ் ஏ சூலாநந்த பெரோ வெளியிட்டுள்ளார்.

புதிய புகைப்பட கருவி ஊடாக கட்டு நாயக்க விமான நிலைய நேரடி தொழிற்பாடுகளை கொழும்பு பிரதான அலுவலகத்தில் இருந்து அவதானிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புகைப்பட கருவி ஊடாக உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறல் நடவடிக்கைகள் பதவி செய்யப்படுவதுடன் அவசர தேவைகளின் போது பாதுகாப்பு பிரிவினரால் அவை பரிசோதனை செய்யப்படும் எனவும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை நடைபெற உள்ளது.

இதில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியில் ஒன்றுகூடுமாறு தொண்டர் ஆசிரிய சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் இன்று புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு மாணவரிடையேயான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான குறுக் கெழுத்து மற்றும் கட்டுரைப்போட்டிகள் மட்டுவில் கமலாசினி வித்தியாசாலையில் நடைபெறும் என்றும் மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகம் கொடுக்கும்படியும் நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# செயலமர்வு

நூலக ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே தங்கள் பாடசாலையில் இருந்து ஓர் நூலக ஆசிரியரை தவறாது அனுப்பி வைக்கும்படி யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் முறையிடலாம்

மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுத் திட்டங்களை வழங்குவதற்காக இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விசேட தொலைபேசி மையம் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கவுள்ளதாகவும் 1919 என்ற விரைவு தொலைபேசி இலக்கத்தினூடாக மக்கள் தமது குறைகளை அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நவீன தகவல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி இந்த மையம் இயங்க உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலி பொதுச்சந்தை, வாழைக்குலைச்சந்தை மேல்தளம் புனரமைப்பு வேலைக்கான கூலி அடிப்படையிலான ஒப்பந்தகாரருக்கான கேள்வி அறிவித்தல்-2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-7 (C8) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடைய பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. கீழ்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 27.10.2010 தொடக்கம் 03.11.2010 பி.ப 3.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி: 04.11.2010 மு.ப 10.00 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 04.11.2010 பி.ப 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை 'செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சிஉதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக பிரதான நிறைவேற்று அதிகாரி, உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம், இல.8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NPT |
|---|---|---|---|---|---|
| 01 | திருநெல்வேலி பொதுச்சந்தை, வாழைக்குலைச் சந்தை மேல்தளம் புனரமைப்பு வேலை | 10000.00 | 500.00 | 60.00 | 15.00 |


நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.
26.10.2010

(சி-1471)

திரு. மே. சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

# நியூசிலாந்துக்கு எதிரான தொடரில்

# இந்.வீரர்கள் இஷாந்,காம்பீர் இணைப்பு



(சென்னை)

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும், இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

காயம் காரணமாக நீக்கப்பட்ட காம்பீர், இஷாந்த் ஆகியோர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளனர். இந்த அணியில் யுவராஜ் சிங்கிற்கு மீண்டும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க நியூசிலாந்து, இந்தியா வருகிறது. முதல் டெஸ்ட் அகமதாபாத்தில் நவம்பர் 4ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது டெஸ்ட் ஐதராபாத் (நவ.12-16), நாக்பூரில் (நவ.20-24) நடக்கிறது.

இந்த டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி தேர்வு நேற்று முன்தினம் தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் சென்னையில் நடந்தது.

இதில் அணித்தலைவர் தோனி பங்கேற்கவில்லை. அவரிடம் தொலைபேசியில் அணி குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின் ஸ்ரீகாந்த் இந்திய அணியை அறிவித்தார்.

இதில் அணித்தலைவர் தோனி, சச்சின், டிராவிட், சேவாக் மற்றும் லக்ஷ்மண் போன்ற மூத்த துடுப்பாட்ட வீரர்கள் வழக்கம் போல இடம் பெற்றுள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக விளையாடிவரும் சச்சின், சமீபத்தில்தான் ஐ.சி.சி. சிறந்த வீரர் விருதை முதன் முறையாக வென்றார்.

இத்தொடரில் 50வது சதத்தை எட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. காயம் காரணமாக நீக்கப்பட்ட காம்பீர், மீண்டும் அணிக்கு திரும்பினார்.

இதனால் தமிழக வீரர் முரளி விஜய்க்கு, ஆடும் லெவினில் வாய்ப்பு கிடைப்பது சந்தேகம் தான்.

### இளம் நடுத்தர வரிசை

பெங்களூர் டெஸ்டில் திறமையை நிரூபித்த இளம் வீரர் சத்தீஸ்வர் புஜாராவுக்கு தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவருடன் ரெய் னாவும் இணைந்து நடுத்தரவரிசையில் சிறப்பாக செயல்படுகின்றார்.

இதனால் டெஸ்ட் அணியில் யுவராஜ் சிங்கிற்கு வாய்ப்பு மீண்டும் மறுக்கப்பட்டுள்ளது.

தவிர, சமீபத்தில் இடம்பெற்ற அபினவ் முகுந்த், உனாட்கட் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

### மீண்டும் இஷாந்த்

மொகாலி டெஸ்டில் சிறப்புமிக்க துடுப்பாட்டதை வெளிப்படுத்திய இஷாந்த் சர்மா, காயம் காரணமாக அவுஸ்தி ரேலியாவுடனான இரண்டாவது டெஸ்டில் இடம்பெறவில்லை.

இவர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். இவருடன் சகீர்கான், ஸ்ரீசாந்த் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

### சுழற் படை

சுழற்பந்து வீச்சிற்கு ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா மற்றும் பிரக்யான் ஓஜா என மூன்று பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய வீரர்களுக்கு பெரும்பாலும் வாய்ப்பு தரப்பட்டுள்ளதால், அறிமுக வீரர்கள் யாரும் அணியில் இடம்பெறவில்லை. ஒருநாள் தொடருக்கான அணி பின்னர் அறிவிக்கப்படும்.

### சிறந்த அணி

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் அணி குறித்து தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் கூறியது,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் இந்திய வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர்.

முக்கியமாக பெங்களூர் டெஸ்டில் இளம் வீரர்கள், அனுபவ வீரர்களுடன் இணைந்து, மறக்கமுடியாத வகையில் விளையாடினர். பந்துவீச்சிலும் அபார செயல்பாட்டை வெளிப் படுத்தினர்.

இதனால் தான் எதிர்வரும் மூன்று டெஸ்ட் போட்டிக்கும் இதே அணியை தேர்வு செய்தோம். நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலும் இந்திய வீரர்கள் தங்கள் வெற்றி நடையை தொடர்வார்கள் என நம்பிக்கை உள்ளது.

இந்திய அணியில் சிறந்த வீரர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. சிறந்த வீரர்கள் அடங்கிய இந்திய அணி வெல்லும்.

அணியில் இடம்பெற்றிருப்பவர்களைத் தவிர, மற்ற இளம் இந்திய வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இது இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல எதிர்காலம் உள்ளதை காட்டுகிறது. இவ்வாறு ஸ்ரீகாந்த் கூறினார்.

### 15 பேர்கள் கொண்ட அணி

தோனி(அணித்தலைவர்), சேவாக், காம்பீர், டிராவிட், சச்சின், வி.வி.எஸ்.லக்ஷ்மண், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன், அமித் மிஸ்ரா, சகீர் கான், இஷாந்த் சர்மா, ஸ்ரீசாந்த், பிரக்யான் ஓஜா, முரளி விஜய், சத்தேஷ்வர் புஜாரா.

### தொடர்ந்து இரண்டாவது இடம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 1-0 என வென்ற இந்திய அணி, தரவரிசையில் 117 புள்ளிகளுடன், தொடர்ந்து இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. முதலிடத்தில் அவுஸ்திரேலியா (130) நீடிக்கிறது, இலங்கை (116), தென்னாபிரிக்கா (115), இங்கிலாந்து (112), அணிகள் அடுத்த 3 இடங்களை பிடித்துள்ளன.

துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் இரண்டா



வது இடத்தில் இருந்த தோனி (786 புள்ளி), நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டார். சேவாக் (713) ஒருஇடம் முன்னேறி ஏழாவது இடத்தை பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுடன் ஒருநாள் தொடரில் பங்கேற்காத சச்சின் (71), இரண்டு இடங்கள் முன்னேறி 8 வது இடத்தைப் பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவுக்க எதிராக சதம் அடித்த விராட் ஹோலி (684) 11 இடங்கள் முன்னேறி, 13வது இடத்தை பிடித்துள்ளார். ஒருநாள் போட்டி பந்துவீச்சாளர்கள் வரிசையில் பிரவீன் குமார் 12 வது, ஹர்ப ஜன் 19 வது இடத்தில் உள்ளனர்.

# பிரபாகரனின் மரணத்தை...

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முதன்மை குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் மற்றும் அவ் அமைப்பின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் ஆகிய இருவரும் குற்றவாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் இருவரும் மரணமடைந்துவிட்டதால் அவர்களது பெயர்கள் நீக்கப்படலாம் என்ற மத்திய புலனாய்வுத்துறையின் (சி.பி.ஐ) எம்.டி.எம்.ஏ எனும் கண்காணிப்புக்குழுவின் பரிந்துரையின் பேரில், பெயர் நீக்க உத்தரவை பயங்கரவாதக் குற்றங்களை விசாரிக்கவென அமைக்கப்பட்டிருக்கும் தடா நீதிமன்ற நீதிபதி தட்சிணாமூர்த்தி பிறப்பித்திருக்கிறார்.

இதனையடுத்து முதன்மைக் குற்றவாளி பிரபாகரன், இரண்டாவது குற்றவாளி பொட்டு அம்மான் என்கிற சண்முகநாதன் சிவசங்கரன் ஆகியோர் ராஜீவ் கொலை வழக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் கைவிடப்படுகின்றன என்று நீதிபதி தட்சிணாமூர்த்தி கூறியுள்ளார்.

அதே நேரம் எம்.டி.எம்.ஏ பிரிவு தொடர்ந்து புலனாய்வு செய்து அவ்வப்போது தனது அறிக்கைகளை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கும் எனவும் நீதிபதி கூறியிருக்கிறார்.

### சி.பி.ஐயிடமிருந்து கருத்து இல்லை

அண்மைக் காலம் வரை பிரபாகரன் மரணம் குறித்து அதிகாரபூர்வமாக கருத்தெதுவும் தெரிவிக்காத இந்திய அரசு இப்போது பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர் மரணமடைந்து விட்டதால் அவர்கள் மீதான வழக்கு முடித்துக் கொள்ளப்படலாம் என்று அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன என்று பலரும் வியக்கிறார்கள்.

சி.பி.ஐ. வட்டாரங்கள் இத்திருப்பம் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டன.

ஆறு மாதங்களுக்கு முன்பு, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கொலை வழக்கிலும், முதல் இரு குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்த பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் இருவரும் இறந்துவிட்டதால், அவர்கள் மீதான வழக்கை முடித்துவிடலாம் என்று கொழும்பு பொலிஸார் கூறியிருந்தனர். இதன் பின்னணியில் தான் சிபிஐயும் சென்னை தடா நீதிமன்றத்திடம் அவ்வாறு மனுச் செய்ததாகவும், ஆனால் அப்போது பிரபாகரனின் மரணச் சான்றிதழ் அல்லது வேறு ஏதாவது ஆதாரம் வேண்டும் என்ற தடா நீதிமன்றம், தற்போது அத்தகைய ஆவணங்கள் ஏதுமில்லாமல், பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் தொடர்பாக கடந்த மாதம் சி. பி.ஐ. சமர்ப்பித்த வேறு ஒரு மனுவை ஏற்று இந்த உத்தரவை பிறப்பித்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்தில் முன்னாள் இந் தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் 16 பேர் கொலையுண்டது தொடர்பான வழக் கில் 26 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

தடா நீதிமன்றம் அவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை விதித்தது. ஆனால் இந்திய உச்சநீதிமன்றம் 1999 ஆம் ஆண்டில் நளினி உட்பட நால்வருக்கு தூக்கு தண்டனை விதித்தும் மற்றவர்களுக்கு பல்வேறு கால அளவுகளில் சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தது.

பின்னர் நளினியின் தூக்கு தண்டனை மட்டும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் மீதான குடியரசுத் தலைவரின் முடிவு என்ன என்பது இதுவரை தெரியவில்லை. (ஏ)

மழலைகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!
Victoria YOGHURT
யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் இலவசமாக விக்ரோறியா ஜோக்கற்றினை வழங்கவுள்ளோம்.
முன்பள்ளி ஆசிரியர்களே!
உங்கள் முன்பள்ளியின் பெயர் ,இடம்,மாணவர் தொகை என்பவற்றை உறுதிப்படுத்தி விக்ரோறியா ஜோக்கற் ஒன்றின் லோகோவுடன் இணைத்து உடன் அனுப்பிவையுங்கள்.குலுக்கல் முறையில் வாரம் ஒரு முன்பள்ளிக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது.
DENMARK DAIRY LANKA
இயக்குநர்-டென்மார்க் ரெரி லங்கா
கூர்மை மல்ரிவிஷன்
325,பலாலி றோட்,பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
இ-1476

# ரெய்னா மீது குற்றச்சாட்டு அணித்தலைவர் தோனி எதிர்ப்பு

(சென்னை)

இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா ஆட்ட நிர்ணய சூதாட்டக்காரர்களுடன் தொடர்பைப் பேணியதாக வெளியான செய்திகளுக்கு இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி தனது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தோனி கருத்துத் தெரிவிக்கையில்,



சுரேஷ் ரெய்னா இந்திய அணியில் ஒரு சிறந்த வீரர். இவ்வாறான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார் என கூறப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாததாகும் என்றார்.

இந்திய அணியின் இலங்கைக்கான சுற்றுப் பயணத்தின் போது இந்திய கிரிக்கெட் அணி தங்கியிருந்த ஹோட்டலில் கமராக்களில் ஆட்டநிர்ணய சூதாட்ட விவகாரம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஜனாதிபதியை...

மாவட்டத்தில்நான்ஜனாதிபதிமஹிந்தவைத் தோற்கடித்தேன். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கின்றேன். ஐ.தே.கவில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வால்களை துரத்த வேண்டிய நேரம் இது.

படையினர் கிளிநொச்சி நோக்கி முன்னேறுகின்றமைக்கு பதிலாக மதவாச்சி நோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள் என்று இறுதியுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சில ஐ.தே.க அரசியல்வாதிகள்நக்கல் அடித்தமை மூலம் கட்சியின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டார்கள் என்றார். (சு)

## நிவாரண விநியோக...

னால் 2 இலட்சத்து 80 ஆயிரம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உலக உணவுத்திட்டத்திற்கான நிதியுதவியில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் வரும் ஜனவரி மாதம் தொடக்கம் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற போசாக்கு உணவு விநியோகத்திலும் பாதிப்பு ஏற்படும்.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் உறவினர், நண்பர்களுடன் வசித்து வருகின்ற இடம்பெயர்ந்த மக்களும் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதாக உலக உணவுத் திட்டம் தெரிவிக்கின்றது.

அந்த மக்கள் மத்தியில் உலக உணவுத் திட்டத்தினால் அண்மையில் நடத்திய ஆய்வொன்றின் மூலம் இது தெரியவந்திருக்கின்றது.

இந்த சிக்கல்களை சமாளிப்பதற்காக தமது தங்க ஆபரணங்களை விற்பது போன்ற பல்வேறு உபாயங்களை அவர்கள்கையாண்டு வருவதாகவும் உலக உணவுத்திட்டம் தனது ஆய்வின் அடிப்படையில் தெரிவிக்கின்றது.

இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கின்ற 25ஆயிரம் பேருக்கும் உறவினர், நண்பர்களது வீடுகளில் வசிப்பவர்களுக்கும், மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்குமான நிவாரண உணவுப் பொருட்களையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள 3 இலட்சம் பள்ளி குழந்தைகளுக்கும் 2 இலட்சம் கர்ப்பிணிமார் மற்றும் கைக்குழந்தைகளைக் கொண்ட தாய்மார்களுக்கும் உரிய போசாக்கு உணவுப்பொருட்களையும் உலக உணவுத்திட்டமே வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (சு)

## கூட்ட...

திருந்தனர்.

கடந்த வாரம் உள்ளூராட்சித் திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அது விவாதத்திற்குக் எடுத்துக் கொள்ளப்படவில்லை. (சு)

## உலகக்கிண்ண புகழ்...

நிலையில் காணப்பட்டதாக மேற்படி நீரியல் பூங்கா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒக்டோபஸுக்காக நினைவுச்சின்னம் ஒன்றையும் நிர்மாணிக்கவுள்ளதாகவும் அப்பூங்கா அறிவித்துள்ளது.

உலக்கிண்ண இறுதிப்போட்டி, அரையிறுதிப் போட்டிகள் உட்பட எட்டு முக்கிய போட்டிகளில் வெற்றி பெறும் அணி எது என்பதை போட்டிகளுக்கு முன்னதாகவே மேற்படி ஒக்டோபஸ் சரியாக எதிர்வு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டிகளில் பங்கு பற்றும் நாடுகளின் தேசியக் கொடிகள் பொறிக்கப்பட்ட இரு கண்ணாடிப் பெட்டிகளில் வெற்றிபெறப்போகும் அணியின் கொடி பொறித்த பெட்டியை தனது தொட்டிக்குள் இறக்குவதன் மூலம் மேற்படி ஒக்டோபஸ் எதிர்வு கூறியது. இந்த எதிர்வு கூறல் செயற்பாடுகளை உலகெங்கும் உள்ள பல தொலைக்காட்சிகள் நேரடியாக ஒளிபரப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

## பரபரப்பை ஏற்படுத்திய...

முக்கியஸ்தராக இருந்த கே.பி., கிளிநொச்சியில் தெரிவித்து உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்று கூறப்படும் கே.பி. கடந்த வாரம் கிளிநொச்சிக்கு சென்றிருந்தார்.

அவர் கண்ணகை குடியிருப்பு என்கிற முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் புலிகள் இயக்கப் போராளிகளின் பிள்ளைகளை நேரில் சந்தித்தார்.

அப்பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினார். அப்போது உரையாற்றிய போதே இவ்வாறு பேசினார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐரோ.ஆணைக்குழு...

இதன்போது இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள், ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மற்றும் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

இது தவிர எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரசல்ஸ் நகரில் வைத்து ஐரோப்பிய நாடளுமன்றத்தின் பிரதிநிதிகள் சிலரையும் சந்தித்துள்ளார்.

இந்த விஜயத்தை நிறைவு செய்து கொண்டு அவர் இன்று தனிப்பட்ட விஜயமாக ஜேர்மனிக்கு செல்லவுள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் ஐரோப்பிய விஜயம் இலங்கை அரசாங்கத்தினால் தமது அரசாங்கத்துக்கு எதிரான நோக்கத்தை கொண்டதாகவே கருதப்பட்டு வருகிறது. (எ)


### ஆள் தேவை

Play Group நேசரியில் படிக்கின்ற சிறுபிள்ளைக்கு மாலை 3.00 மணி தொடக்கம் 7.30வரை பாடம் சொல்லிக்கொடுப்பதற்கும், பொழுதைக் கழிப்பதற்கும் ஆள் தேவை.வலிகாமம் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

TP.:0776028734

(2741)


## கிளி.கல்வி...

ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த நிர்வாகியான இவர் கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படுவதற்கான காரணங்கள் எவையும் கூறப்படவில்லை. (சு)

## கிணற்றி...

வீசிய பிரஸ்தாப தாய் சிகிச்சைக்காக தனது சகோதரனுடன் சங்கானை வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டபோது சம்பவம் தெரிய வரவே மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக தாயைகைதுசெய்த பொலிஸார் கிணற்றிலிருந்து சிசுவின் சடலத்தையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின்தாய் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் பாலசிங்கம்



கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வாழ்விடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பாலசிங்கம் அவர்கள் 26.10.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் இலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான எல்லுப்போல செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் ஸ்ரீமுருகதாஷ்(பிரான்ஸ்), ஸ்ரீவதனி, ஸ்ரீ ஜெயவதனா (பிரான்ஸ்), ஸ்ரீவரோதயன் (உரிமையாளர், அனோஜன் ரேடர்ஸ்,மல்லாகம்), ஸ்ரீவசந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிச்சந்திரன், செல்வதாஷ் (பிரான்ஸ்), கார்த்திகா (பிரான்ஸ்),கிருபாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், டிதுர்ஷன், கோகிலன், அபிநயன், அனோஜன், ஆருஷன் (பிரான்ஸ்), அஜீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், பரஞ்சோதியின் அன்புச் சகோதரனும், காலம்சென்ற மோகனதாஸ் மற்றும் முரளிதாஸ் (பிரான்ஸ்), கேமலதா (பிரான்ஸ்), பிறேமலதா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சின்னத்தம்பி தங்கராசா, அனுஷாவதி, இரத்தினசிங்கம், நாகராஜா, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுவன் உசத்திஓடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(2748)


### யாழில் முதல் முறையாக!

25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகத்துறை கற்கைநெறிகள்



பத்திரிகை – வானொலி – தொலைக்காட்சி – இணையம்
அச்சகம் – ஸ்ரூடியோ – ஃபோட்டோ – வீடியோ – அறிவிப்பாளர்
விற்பனை ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல், விளம்பரத்துறை
என்னும் பல அரச – தனியார்துறை தொழில்வாய்ப்புக்கள்

IT Oriented Journalism – கணினி-இணையப் பயிற்சியுடன்
Newspaper Layout – பக்க வடிவமைப்பு, வரைகலை
Radio Journalism – அறிவிப்பாளர் பயிற்சியுடன்
Creative Graphic Designing – ஃபோட்டோஷொப், இன்டிசைன்
TV Journalism – வீடியோ படப்பிடிப்பு, எடிட்டிங்குடன்
Professional Photography – SLR, டிஜிட்டல் ஃபோட்டோ, எடிட்டிங்

3 மாத கற்கைநெறி – 2 மாத பணியிடப் பயிற்சி
கொழும்பு ஊடகங்களுக்கான நேரடி விசிட் – தொழில் உத்தரவாதம்

கொழும்பு – வெளிநாட்டு ஊடக வல்லுநர்களின் வழிகாட்டலுடன் முற்றிலும் செயன்முறைப் பயிற்சிகள்



நூலக வசதி – கணினி ஆய்வுகூடம்
Audio - Video Lab - Studio
கலை, இலக்கிய நயம் - சினிமா, குறும்பட காட்சிகள்

கற்கைநெறிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் பற்றிய விளக்கக் கருத்தரங்கு
ஒக்டோபர் 31 ஞாயிறு காலை 10 மணிக்கு

இன்றே பதிவு செய்யுங்கள்

**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931
MEDIA

### அன்பொளி கல்வியகம்

யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை-2010 சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

(சி-1479)

### அவனோர் AVANOR SUPER MARKET

இம் மாத சிறப்பு விலைக்கழிவுகள்

27-10-2010 - 18-11-2010



உங்கள் குடும்பத்திற்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் உங்கள் மனம்போல் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

அவனோர் SUPER MARKET
NO.269/B, Palaly Road,
Kandhermadam,
Jaffna.



Fortune oil
Chocolate
Toblerone
Action

மேலும் பல பொருட்களைப் பெற்றிட நாடுங்கள்.

Protinex
Kvc Orange Cordial
Dish wash
Link kesha
Johnsons Baby Soap

(2749)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.